**கூடுதல்  தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்.**

முன்னிலை :  திரு.K.அருணாசலம், எம்.ஏ., எம்.எல்.,

தலைமை தாங்கும் அதிகாரி,

கூடுதல்  தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.

வியாழன் கிழமை 12ம் நாள், டிசம்பர் மாதம் 2024ம் வருடம்

**தொழிற்தாவா எண். 44/2023**

(CNR No.TNCB04-000132-2023)

D. ஈஸ்வரன்,

த/பெ. தர்மலிங்கம்,

கதவு எண். 232,

திருவள்ளுவர் நகர்,

ராமநாதபுரம்,

கோயம்புத்தூர் - 641 045. … மனுதாரர்

//எதிராக//

நிர்வாகம்,

கே. 141, மலையாண்டிப்பட்டணம் தொடக்க

வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்,

மலையாண்டிப்பட்டணம் அஞ்சல்,

பொள்ளாச்சி வட்டம் - 642 114. … எதிர்மனுதாரர்

*****

இந்த வழக்கு கடந்த 04.12.2024 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.D. சதீஸ் சங்கர், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.M. தினகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

**முதல்நிலை தீர்வம்**

மனு தொழிற் தகராறு சட்டப் பிரிவு 2(A)(2)ன் கீழ் எழுந்த வழக்கு ஆகும். எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் 01.02.2023 தேதியிட்ட பணிநீக்க உத்தரவை ரத்து செய்து மனுதாரருக்கு பணித்தொடர்ச்சியுடனும், முழு பின் சம்பளத்துடனும், இதர அனைத்துப் பலன்களுடன் பணி வழங்கக் கோரி வேண்டுகிறார்.

2. **மனு சுருக்கம் :-**

எதிர்மனுதாரர் கூட்டுறவு சங்கம் விவசாயிகளை உறுப்பினராகக் கொண்டு

விவசாயக் கடன், பயிர் கடன், விவசாய உபகரணங்கள் வாங்க கடன், உரக் கடன், பூச்சி மருந்துகளுக்குக் கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன், கால்நடைக் கடன், நகைக் கடன் மற்றும் விவசாயிகளுக்கு நகைக்கடன் ஆகிய கடன்களை உறுப்பினர்களின் தேவைக்காக வழங்கிவரும் சங்கமாகும். மேலும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி சங்கத்தில் 20க்கும் மேற்பட்ட பணியாளர்கள் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். மனுதாரர் கடந்த 03.05.1991 தேதியிட்ட உத்தரவு மூலம் 10.05.1991ம் வருடம் பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை (லிட்)(சூடாமணி) நிறுவனத்தில் விற்பனையாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பின்னர் பணி நிரந்தரம் செய்யப்பட்டார். மனுதாரர் பிறந்த வருடம் 1966 ஆகும். கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் ந.க.எண். 7/11/2000 கி-9 நாள் 22.12.2000 தேதியிட்ட உத்தரவின் பேரில் குடிமைப் பொருள் விநியோகப் பிரிவில் பணிபுரிந்த ஊழியர்களை விற்பனையகம் அமைந்துள்ள பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு பணியிட மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன்

அடிப்படையில் மனுதாரர் கடந்த 23.12.2000ம் தேதிமுதல் எதிர்மனுதாரர் சங்கத்தில் நிரந்தர ஊழியராக முன்பு செய்த பணிக்காலத்தை அப்படியே பணித் தொடர்ச்சியாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணித் தொடர்ச்சியுடன் பணியமர்த்தப்பட்டார். பின்னர் மனுதாரருக்கு கடந்த 2002ம் ஆண்டு உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. பின்னர் கடந்த 17.04.2007ம் ஆண்டு முதுநிலை எழுத்தர் என்ற பதவி வழங்கப்பட்டு அதற்குரிய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. மனுதாரர் எதிர்மனுதாரர் சங்கத்திலிருந்து கே-666, பொள்ளாச்சி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செயலாளர் (பொறுப்பு) என்ற பணிக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தார். மனுதாரரை மேற்படி சங்கம் நிரந்தரமான முதுநிலை எழுத்தர் என்ற பதவியில் நியமனம் செய்து கொள்ள பரிந்துரைத்து எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தனி அலுவலர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு கடந்த 14.05.2010ம் தேதி கடிதம் ஒன்று அனுப்பினார். பின்னர் மனுதாரர் 2426 ராவத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் செயலாளர் (பொறுப்பு) ஆக

நியமிக்கப்பட்டு பின்னர் மீண்டும் கே666 பொள்ளாச்சி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பணிக்கு சேர்ந்தார். மேற்படி சங்கத்தில் பணிபுரிந்த போது மனுதாரர் மீது பொய் புகார் ஒன்று பொள்ளாச்சி (மேற்கு) காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சிறப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் - II பொள்ளாச்சி முன்பு உரிய விசாரணைக்கு பிறகு குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து மனுதாரரை விடுதலை செய்து 31.10.2012ல் தீர்ப்பு வழங்கியது. எதிர்மனுதாரர் சங்கத்தில் கடந்த 1999ம் வருடம் முறையற்ற வகையில் பணியமர்த்தப்பட்ட ஊழியர் திருமதி. எஸ் மனோன்மணி என்பவருக்கு கூட்டுறவு சங்கங்களின் கோவை மண்டல இணைப்பதிவாளர் அவர்களின் 05.01.2007ன்படி உதவியாளர் (எழுத்தர்) என்ற பதவியில் கடந்த 12.03.2001 முதல் பணி வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது. மனுதாரருக்கு 17.04.2007ல் முதுநிலை எழுத்தர் என்ற பதவி உயர்வு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 07.09.2011 அன்று பொள்ளாச்சி சரக துணை பதிவாளரின் கடிதம் ந.க. எண்.

685/2009ன்படி மனுதாரருக்கு வழங்கப்பட்ட முதுநிலை எழுத்தர் என்ற பதவி உயர்வு எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்ய பரிந்துரைக்கப்பட்டு, 07.10.2011 தேதியிட்ட எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தனி அலுவலரின் செயல்முறை ஆணை மூலம் மனுதாரருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு எவ்வித நியாயமான காரணமின்றியும் முன்னறிவிப்புமின்றியும் ரத்து செய்யப்பட்டது. மேற்படி உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர்கள் முன்பு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்தார். மேற்படி மனு கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை அடுத்து மனுதாரர் நீதி பேராணை எண். WP. No. 17380/2012 மற்றும் MP. No. 2/2012 ஐ மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் இடைக்கால தடை விதிக்கப்பட்டது. மேற்படி உத்தரவைத் தொடர்ந்து மனுதாரர் மீண்டும் முதுநிலை எழுத்தர் என்ற பதவியில் பணியமர்த்தப்பட்டார். மனுதாரர் கடந்த 2012ம் வருடம் அக்டோபர் மாதம் மீண்டும் எதிர்மனுதாரர் சங்கத்திற்கு பணியிட மாற்றம்

செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தார். எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரரை விட பணி மூப்பில் இளையவரும், முறையற்ற வகையில் நியமனம் பெற்றவருமான எழுத்தர் என்ற பதவியில் பணியமர்த்தப்பட்டிருந்த திருமதி. மனோன்மணிக்கு, செயலாளர் (பொறுப்பு) என்ற பதவி வழங்கப்பட்டதை மனுதாரர் கடுமையாக ஆட்சேபித்து வந்தார். பின்னர் மனுதாரருக்கு விற்பனையாளர் என்ற பதவி வழங்கப்பட்டது. ஏற்கனவே நியாயவிலை கடைகளுக்கு 7 விற்பனையாளர்களும், 7 அளவையாளர்களும் இருக்கும் நிலையில் சங்கத்தின் மூத்த பணியாளரான மனுதாரரை வேண்டுமென்றே பதவி குறைப்பு செய்திருப்பது சட்ட விரோதமானது என்பதால் அதனை மாற்றம் செய்து உரிய பணி வழங்க மனுதாரர் கோரிக்கை வைத்தார். அதன்படி எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரின் பதவி பெயரை எழுத்தர் என்று தன்னிச்சையாகவே மாற்றியது. மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய உயர்வுகளை தணிக்கை செய்ததன் அடிப்படையில் மனுதாரர் பிற சங்கங்களில் பணி புரிந்த சம்பளம் ரூ. 64,634/-ஐ எதிர்மனுதாரர்

சங்கத்திலிருந்து பெற்றுள்ளார் என்றும் அதனை உடனடியாக சம்பந்தப்பட்ட சங்கத்திலிருந்து பெற்று எதிர்மனுதாரர் சங்கத்திற்கு செலுத்தவேண்டுமென்று குறிப்பிட்டு கடந்த 16.12.2013 அன்று மனுதாரருக்கு குறிப்பாணை ஒன்று அனுப்பப்பட்டது. மேற்கூறிப்பிட்ட குறிப்பாணைக்கு மனுதாரர் தனது ஆட்சேபனைகளை 22.12.2013 அன்று தெரிவித்தார். மனுதாரர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு விளக்கம் அளித்து 19.12.2013 மற்றும் 22.12.2013 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கும் கூட்டுறவு சங்கங்களின் இணை மற்றும் துணை பதிவாளருக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளார். பின்னர் 23.12.2013 முதல் மனுதாரர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். மேற்படி காலத்திற்கு பிழைப்பூதியம் வழங்கப்படவில்லை. மனுதாரர் கடந்த 08.01.2014 அன்று தற்காலிக பணி நீக்கத்தை நீக்கறவு செய்து பணி வழங்குமாறு இணைப் பதிவாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். கடந்த 19.03.2014 அன்று மனுதாரருக்கு கடமை மற்றும் பொறுப்புகளிலிருந்து தவறி செயல்பட்டதாகக் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதற்கு மனுதாரர் 28.03.2014 அன்று

கடிதம் மூலம் தனது விளக்கத்தை நிர்வாகத் தலைவருக்கு சமர்ப்பித்தார். எதிர்மனுதாரர் நிர்வாகம் 08.05.2014 தேதியிட்ட கூடுதல் குற்றச்சாட்டு குறிப்பாணையில் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து மனுதாரருக்கு வழங்கியது. மனுதாரர் 23.08.2014 அன்று அனுப்பிய பணி கோரும் கடிதத்தைத் தொடர்ந்து எதிர்மனுதாரர் நிர்வாகம் 28.08.2014 தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரருக்கு 01.09.2014ல் மீண்டும் பணி வழங்கியது. ஆனால் கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஏதும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. பின்னர் இணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி மனுதாரர் மறுபரவல் முறையில் கடந்த 24.10.2014 முதல் முதுநிலை எழுத்தராக கோயம்புத்தூர் மின் திட்டப் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்திற்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தார். மனுதாரருக்கு கடந்த 25.01.2015 அன்று சாலை விபத்து ஏற்பட்டு உடலில் கொடுங்காயம் ஏற்பட்டதால் மருத்துவமனையில் 25 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். மேலும் 45 நாட்கள் மருத்துவ விடுப்பு வேண்டி கடந்த 25.02.2015ல் மேற்படி

சங்கத்திற்கு கடிதம் அனுப்பினார். அதன் அடிப்படையில் மனுதாரருக்கு மருத்துவ விடுப்பு வழங்கப்பட்டது. மனுதாரர் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளருக்கு கடந்த 31.12.2015 அன்று முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து கடந்த 30.01.2016 அன்று மேற்படி சங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு எதிர்மனுதாரர் சங்கத்தில் கடந்த 02.02.2016ல் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார். மனுதாரர் தனக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஒதுக்கப்படாதது குறித்து 10.01.2016 அன்று இணைப் பதிவாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். மனுதாரர் 14.03.2016 முதல் 19.03.2016 மற்றும் 21.03.2016 முதல் 24.03.2016 ஆகிய நாட்களுக்கு மருத்துவ விடுப்பு வழங்கக் கோரி 21.03.2016 அன்று கடிதம் அனுப்பினார். மனுதாரருக்கு விடுப்பு நிலுவையில் இல்லாத காரணத்தால் அது ஊதியமில்லா விடுப்பாக கருதப்படும் என்று கடந்த 24.04.2016 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் மீண்டும் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் அறுவை சிகிச்சைக்குரிய காப்பீடு அட்டை வழங்க கோரிக்கை வைத்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் நிர்வாகம் காப்பீடு அட்டை வழங்க முன்வரவில்லை.

எனவே தனக்கு ஊதியம் கணக்கிட்டு வழங்கக் கோரியும் வேறு சங்கத்திற்கு மறுபரவல் முறையில் பணியமர்த்தக் கோரியும் இணைப்பதிவாளருக்கு கடந்த 03.04.2017 அன்று புகார் ஒன்றை அனுப்பி வைத்தார். அதற்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் கடந்த 19.04.2017 அன்று மனுதாரருக்கு பதில் கடிதம் அனுப்பியது. மனுதாரர் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை முடிந்து பணிக்கு வந்த மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் பணி வழங்க மறுத்துவிட்டது. அதனைத் தொடர்ந்து தனக்கு உடனடியாக பணி வழங்கக் கோரி கடந்த 03.05.2017 அன்று மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பினார். அதனைப் பெற்றுக்கொண்ட நிர்வாகம் கடந்த 17.05.2017 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியது. அதில் மனுதாரருக்கு மீண்டும் பணி வழங்குவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் மனுதாரர் 01.06.2016 முதல் 11.06.2018 வரையிலான காலகட்டத்திற்கு பிழைப்பூதியம் கணக்கிட்டு வழங்கக் கோரி மாண்புமிகு தொழிலாளர், துணை ஆணையர் பணிக்கொடை அவர்கள் முன்பு PSA. No. 20/2019 வழக்கினைத் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு

தற்போது நிலுவையில் இருந்து வருகிறது. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மனுதாரரின் 30.05.2018 தேதிய புகார் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி ந.க. 2627 / 2018 வே.உ.நாள் 07.06.2018 உத்தரவைப் பிறப்பித்தார். மேலும் ந.க.2118/2015 வேஉ நாள் 11.06.2016 உத்தரவின் மூலம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் செயலருக்கு மனுதாரர் பணியில்சேர்ந்தது தொடர்பான பணி சேர் அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. மனுதாரரது 11.06.2018 தேதியிட்ட கடிதத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு கடந்த 12.06.2018 முதல் மீண்டும் பணி வழங்கப்பட்டது. ஆனால் கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கப்படவில்லை. அது குறித்து இணைப் பதிவாளருக்கு கடந்த 18.06.2018 மற்றும் 12.07.2018 ஆகிய தேதிகளில் மனுதாரர் கடிதங்களை அனுப்பினார். மேலும் தனது ஊதிய உயர்வு குறித்து 08.09.2018ம் தேதி இணைப்பதிவாளருக்கு கடிதம் அனுப்பினார். ஆனால் ஊதிய உயர்வு எதுவும் வழங்கப்படவில்லை. கடந்த 11.09.2018 அன்று முதுநிலை எழுத்தராக மனுதாரருக்கு உர விற்பனையாளர் என்ற பதவி

வழங்கப்பட்டதாக இணைப்பதிவாளருக்கு கடிதம் வழங்கப்பட்டது. கடந்த 18.09.2018ம் தேதி எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு ந.க. 2118/2015/வே2 நாள் 31.07.2018 உத்தரவின் பேரில் மனுதாரருக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கடிதம் அனுப்பினார். பின்னர் 12.06.2018 முதல் மனுதாரர் மீண்டும் பணியமர்த்திக் கொள்ளப்பட்டார். ஆனால் பொறுப்புகள் மற்றும் கடமைகள் நிர்ணயம் செய்யப்படவில்லை. தனக்கு ஊதியம் வழங்கக் கோரி மனுதாரர் அனுப்பிய பல கடிதங்களின் விளைவாக எதிர்மனுதாரர் நிர்வாகம் 28.09.2018 தேதியிட்ட கடிதம் ஒன்றை மனுதாரருக்கு அனுப்பியது. அதில் மனுதாரருக்கு 12.06.2018ம் தேதி முதல் 10.08.2018ம் தேதி வரை ஏன் சம்பளம் அனுமதிக்கப்படவில்லை என்பது தெரியவில்லை என்றும் 12.06.2018 முதல் 10.08.2018 வரையுள்ள இடைக்காலத்திற்குண்டான சம்பளத்தைப் பெற கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளரோ அல்லது துணைப்பதிவாளரோ சம்பளம் வழங்கலாம் என எழுத்துப்பூர்வமாக உத்தரவு பிறப்பித்ததால் எதிர்மனுதாரர் நிர்வாகம் சம்பளம்

வழங்க கடமைப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன் 11.08.2018ம் தேதி முதல் சம்பளம் பெற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் தெரிவித்தால் மனுதாரருக்கு கடைசியாக வழங்கி வந்த ஊதியம் அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் மனுதாரர் கொடுக்கப்பட்ட ஊதியத்தைப் பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு உள்ளிட்ட பிற கோரிக்கைகள் தொடர்பாக தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 12(3) ன் கீழ் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தது. திருமதி. மனோன்மணியின் செயல்கள் குறித்து மனுதாரர் பல கடிதங்களை அனுப்பியிருந்ததால் அதன் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கடிதம் மற்றும் மனுதாரரின் மனு தொடர்பாக கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் 02.08.2018 ந.க. 353/2017 சு.பி. (வே.2)(1) ன் அடிப்படையில் மனுதாரரது பணி மூப்பு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் அதன் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றும்

தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மனுதாரர் தனக்கு ஒப்பந்தப்படி ஊதிய உயர்வு கணக்கிட்டு வழங்கவேண்டும் என்று கோரி கடந்த 27.03.2019 அன்று கடிதம் ஒன்றை துணைப் பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிவைத்தார். மனுதாரர் 09.04.2019 முதல் 12.04.2019 வரை நான்கு நாட்கள் சிறுவிடுப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்து கடிதம் ஒன்றை 08.04.2019 அன்று எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் செயலர், இணை மற்றும் துணைப் பதிவாளருக்கு அனுப்பி வைத்தார். மனுதாரரது விடுப்பு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு முறையாக விடுப்பு அனுமதிக்காமல் வருகைப் பதிவேட்டில் ஆப்சென்ட் என்று குறியீடு செய்ய துவங்கியது. மேலும் மனுதாரர் மாண்புமிகு தொழிலாளர் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்துள்ள கணக்கீட்டு மனு எண். 171/2017ல் விசாரணைக்கு செல்லவேண்டியிருந்ததால் 15.04.2019 மற்றும் 16.04.2019 தேதிகளில் விடுப்பு விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். மனுதாரருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டிருந்ததால் 20.04.2019 முதல் 36 நாட்களுக்க மருத்துவ விடுப்பு வேண்டி விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி விடுப்பு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நிர்வாகாம் 22.04.2019 தேதியிட்டு குறிப்பாணை ஒன்றை மனுதாரருக்கு வழங்கியுள்ளது. மேற்படி குறிப்பாணையில் மனுதாரர் 09.04.2019 முதல் 21.04.2019 முடிய எவ்வித தகவலுமின்றி தொடர்ந்து பணிக்கு வராமல் விடுப்பில் இருந்து வந்ததாகவும் திறன்பட பணிபுரியாதது போன்ற ஆதாரமற்ற பல்வேறு குற்றச்சாட்டுகளை மனுதாரர் மீது வேண்டுமென்றே முன்வைத்தது. கடந்த 09.04.2019 அன்று கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளருக்கு கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் மற்றும் நடவடிக்கை எடுத்த விவரத்தை துணைப் பதிவாளருக்கு தெரிவிக்கும்படியும் கடந்த 23.04.2019ம் தேதியில் உத்தரவிடப்பட்டது. மனுதாரருக்கு வழங்கப்பட்ட 22.04.2019 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை எவ்வித மேல்நடவடிக்கையுமின்றி கைவிடப்பட்டது. மனுதாரரை கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.2851/2019-12 நாள் 07.06.2019 மூலம் சிசி 2466 கோயம்புத்தூர் மாவட்ட சத்துணவு பணியாளர்

கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்தில் மறு பரவல் முறையில் பணிகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் இணைப் பதிவாளர் அவர்களுக்கு 21.06.2019 தேதியிட்ட கடிதம் ஒன்றை அனுப்பினார். அக்கடிதத்தில் மனுதாரர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், மனுதாரரை மறுபரவல் முறையில் வேறு சங்கத்திற்கு மாற்றம் செய்யப்படும்போது பணிப் பளு அதிகம் ஏற்படும் என்றும், அதனால் வேறு சங்கத்திற்கு அனுப்ப இயலாது என்று பதில் தெரிவித்திருந்தார். மனுதாரர் தனக்கு ஊதிய நிர்ணயம் செய்வது தொடர்பாகவும் விடுப்பு சம்பளம் அனுமதிக்காதது குறித்தும் 21.06.2019 முதல் 30.09.2019 வரை வருகைப் பதிவேட்டில் கையொப்பம் பெற மறுத்ததால் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அவர்களுக்கு 03.07.2019ம் தேதி புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். மேலும் மனுதாரர் உர விற்பனையாளராக பணிபுரிந்த வகையில் அவருக்கு வழங்கப்படவேண்டிய ஊக்கத் தொகையை எவ்வித முன்னறிவிப்புமின்றி மண்ணெண்ணை காலி பேரல் இருப்பு குறைவிற்காக ரூ.

8000/-ஐ எவ்வித அறிவிப்புமின்றி பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு தனது ஆட்சேபனைகளை மனுதாரர் கடந்த 18.09.2019 அன்று துணை மற்றும் இணை பதிவாளருக்குத் தெரிவித்தார். கடந்த 07.06.2019 அன்று மனுதாரரை கோவை மாவட்ட சத்துணவு பணியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு மறுபரவல் முறையில் அனுப்ப இணைப்பதிவாளர் உத்தரவு பிறப்பித்தார். ஆனால் எதிர்மனுதாரர் நிர்வாகம் 30.09.2019 வரை மனுதாரரைப் பணியிலிருந்து விடுவிக்காமல் காலதாமதம் செய்து வந்தது. இணைப்பதிவாளரின் தொடர் வற்புறுத்தலின் பேரில் 27.09.2019 அன்று மனுதாரர் விடுவிக்கப்பட்டார். பின்னர் மனுதாரர் மேற்படி சங்கத்தில் பணியில்சேர்ந்து தொடர்ந்து 30.11.2020 வரை பணிகளை மேற்கொண்டார். மனுதாரரை மீண்டும் எதிர்மனுதாரர் சங்கத்தில் பணியமர்த்திக்கொள்ள இணைப் பதிவாளர் அவர்களின் 30.11.2020 தேதியிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மீண்டும் பணிக்கு சென்ற போது மனுதாரருக்கு பணி மறுக்கப்பட்டது. மனுதாரர் தனக்கு பணி வழங்க வேண்டுமென்றும், ஊதியம் கணக்கிட்டு வழங்கவேண்டுமென்றும் 19.01.2021

அன்று கடிதம் ஒன்றை எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பினார். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், கோயம்புத்தூர் அவர்களின் 27.01.2021 தேதியிட்ட செயல்முறை ஆணை ந.க. எண். 5775/2020/வே-2 அடிப்படையில் மனுதாரர் எதிர்மனுதாரர் சங்கத்திலிருந்து கே2032 அழகப்பகவுண்டனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மறுபரவல் முறையில் பணியமர்த்த ஆணையிடப்பட்டது. மனுதாரர் தனக்கு வழங்கப்பட்டு வரும் ஊதிய விகித முரண்பாடுகளைக் களைந்து உரிய ஊதியங்களைக் கணக்கிட்டு வழங்கக் கோரி 01.02.2021 மற்றும் 03.02.2021 ஆகிய தேதிகளில் கடிதங்களை துணை மற்றும் இணை பதிவாளருக்கு அனுப்பியுள்ளார். அதனைத் தொடர்ந்து மனுதாரர் கே2032, அழகப்பகவுண்டனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பணியில் சேர சென்றபோது அச்சங்கத் தலைவரால் மனுதாரரை மேற்படி சங்கத்தில் ஈர்த்துக்கொள்ள முன்வரவில்லை. எனவே மனுதாரர் தனக்கு ஊதியம் கணக்கிட்டு வழங்கக்கோரி கூட்டுறவு சங்கங்களின் இணை மற்றும் துணைப் பதிவாளருக்கு 08.03.2021ல் கடிதம் அனுப்பினார். அதனைத் தொடர்ந்து மனுதாரர் 18.04.2021

அன்று கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதனைத் தொடர்ந்து கடந்த 20.04.2021 அன்று கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரின் ந.க.எண். 5725/2020/வே2(1)ன் படி மனுதாரரை மறுபரவல் முறையில் அழகப்பகவுண்டனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு பணியமர்த்தம் செய்ததை ரத்து செய்து மீண்டும் தாய் சங்கத்திற்கு பணியமர்த்தம் செய்து ஆணையிடப்பட்டது. கடந்த 06.05.2021 அன்று மனுதாரர் உர விற்பனையாளர் என்ற பதவியில் பணியமர்த்தப்பட்டார். ஆனால் அவருக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்படவில்லை. மனுதாரர் தனக்கு உடனடியாக உர விற்பனையாளர் என்ற பதவிக்குரிய பொறுப்புகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்து வழங்க கோரிக்கை வைத்ததை அடுத்து 06.05.2021 தேதியிட்டு 18.05.2021 அன்று கடமைகள் மற்றும் பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டது. மனுதாரரின் உறவினருக்கு கொரோனா தொற்று பரவியதால் மனுதாரர் 19.05.2021 முதல் 21.05.2021 வரை சிறுவிடுப்பு வழங்கக் கோரி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேற்படி விடுப்பு முடிந்து எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு வந்தபோது 24.05.2021 ம் தேதியில் அலுவலகப் பெண் ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்ததாலும் அலுவலகம் மூடப்பட்டிருந்ததாலும் பணி செய்ய இயலாமல் திரும்ப வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டார். மனுதாரர் குடியிருந்து வரும் குடியிருப்புப் பகுதி கொரோனா பரவல் காரணமாக தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மனுதாரர் உள்ளிட்ட குடியிருப்பு வாசிகள் வெளியேற அனுமதிக்கப்படவில்லை. மேற்படி காலக்கட்டத்தில் பொதுப் போக்குவரத்து முற்றிலுமாக தடைசெய்யப்பட்டதால் மனுதாரரால் எதிர்மனுதாரர் நிர்வாகம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்று உரிய விடுப்பு விண்ணப்பத்தை நேரில் சமர்ப்பிக்க இயலவில்லை. ஆனால் அது தொடர்பான கடிதங்களை எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கும், இணை மற்றும் துணை பதிவாளருக்கும் அனுப்பியுள்ளார். கொரோனா பொது முடக்கம் தொடர்பாக சற்று தளர்வுகள் வழங்கப்பட்ட பிறகு கடந்த 11.06.2021 அன்று மீண்டும் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரிய சென்ற போது மேற்படி சங்கப் பணியாளர் திருமதி. நாகம்மாள் கொரோனா காரணமாக

மரணமடைந்துவிட்டதாகவும், மேலும் திருமதி. சண்முகப் பிரியா என்ற பணியாளர் கொரோனாவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டு எதிர்மனுதாரர் நிர்வாகம் பூட்டப்பட்டதால் பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. மீண்டும் 14.06.2021 அன்று மனுதாரர் வழக்கம் போல் பணிக்கு சென்ற போது அவரை வருகைப் பதிவேட்டில் கையொப்பம் செய்ய நிர்வாகம் அனுமதிக்கவில்லை. எனவே மனுதாரர் தனக்கு பணிப் பாதுகாப்பு வழங்கவேண்டுமென்றும் நிலுவையிலுள்ள ஊதியத்தை கணக்கிட்டு வழங்குமாறும் வேண்டி கூட்டுறவு சங்கங்களின் மாநிலப் பதிவாளர் சென்னை அவர்களுக்கு மேல்முறையீட்டு மனுவினை கடந்த 23.06.2021 அன்று அனுப்பியுள்ளார். மேலும் மனுதாரர் கடந்த 03.07.2021ம் தேதி எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களுக்கு மீண்டும் பணி வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். கடந்த 12.07.2021 தேதியிட்டு மனுதாரருக்கு விளக்கம் கோரி எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்தில் 29.06.2016 முதல் 11.06.2017 வரையிலான 713 நாட்கள் 09.04.2019 முதல் 29.09.2019

வரை 174 நாட்களும் பணிக்கு எவ்வித தகவலும் விடுப்புக் கடிதமும் வழங்காததற்கு விளக்கம் அளிக்கக் கோரியும் அதே போல் சிசி2466, கோயம்புத்தூர் சத்துணவுப் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் எதிர்மனுதாரர் சங்கத்தில் 06.05.2021 அன்று பணியில் சேரும் வரை எங்கு பணியாற்றியுள்ளார் என்ற விவரத்தை உடனடியாக தெரிவிக்க வேண்டுமாகக் கூறி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு 26.05.2021 முதல் உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தியும் மனுதாரர் முறையற்ற வகையில் விடுப்பு எடுத்து சங்க செயல்பாடுகளுக்கு தடை ஏற்படுத்துவதாகவும் குற்றம் சாட்டி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. மேற்படி கடிதத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு 06.05.2021 முதல் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றும் ஆனால் பொறுப்புகளை ஏற்காமல் விடுப்பு எடுத்து வருவதாகவும் அதனால் பணிச்சுமை அதிகரித்திருந்ததாகவும் தெரிவித்திருந்தது. மனுதாரர் தன்னால் ஏன் பணிக்கு வர இயலவில்லை என்பதற்கான காரணத்தை அப்போதைய செயலாளர் திரு. ரவி

அவர்களிடம் தெரிவித்துள்ளார். மீண்டும் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிகளை மேற்கொள்ள உகந்த சூழ்நிலை இல்லாததால் வேறு சங்கத்திற்கு மாற்றம் செய்து துணைப்பதிவாளர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை கடந்த 30.07.2021 அன்று அனுப்பினார். மேலும் தனக்கு பணியிடம் வழங்கக் கோரியும் ஊதியம் வழங்கக் கோரியும் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு கடந்த 03.08.2021 அன்று மனுதாரர் கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் துணைப்பதிவாளர் அவர்கள் மனுதாரரை எதிர்மனுதாரர் சங்கத்திலிருந்து வேட்டைக்காரன்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் தற்காலிகமாக பணியமர்த்த உத்தரவிடப்பட்டது. மேலும் ஒரு வார காலத்திற்கும் மறுபரவல் குறித்த முன் மொழிவினை கோவை மண்டல இணைப்பதிவாளருக்கு அனுப்பி வைக்க எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களுக்கு 04.08.2021 ந.க.2345/2018/வே.ச.ச மூலம் உத்தரவிடப்பட்டது. கடந்த 16.08.2021 தேதியிட்டு மனுதாரருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டு குறிப்பாணையில் மனுதாரர் தனது கடமை மற்றும்

பொறுப்புகளிலிருந்து தவறியதாகவும் 19.05.2021 முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிக்கு வராமல் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி குறிப்பாணைக்கு விளக்கம் தெரிவிப்பதற்காகவும், வேட்டைக்காரன்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு மறுபரவல் முறையில் பணியிடமாற்றம் செய்ய உத்தரவிடக் கோரியும் கடந்த 19.08.2021 அன்று கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி கடிதத்தைப் பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை 03.09.2021 தேதியிட்ட உத்தரவு மூலம் நிரந்தர பணிநீக்கம் செய்து உத்தரவிட்டது. மனுதாரர் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்கள் முன்பு 1983ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 153ன் கீழ் சீராய்வு மனு 8472/2021/வே-2 ஒன்றை தாக்கல் செய்தார். மேற்படி மனுவினை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்கள் மனுதாரருக்கு இயற்கை நீதிக் கோட்பாட்டின்படி போதிய வாய்ப்பளித்து உள்ளக விசாரணை அறிக்கை பெற்று அதனை மனுதாரருக்கு தொடர்புப்படுத்தி விளக்கம் பெற்று நேர்முக விசாரணை

நடத்தி உரிய இறுதி ஆணையினை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் பிறப்பிக்குமாறு ஆணையிட்டார். மேற்படி உத்தரவைத் தொடர்ந்தும் மனுதாரருக்கு மீண்டும் பணி வழங்க எதிர்மனுதாரர் நிர்வாகம் முன் வராததால் மனுதாரர் கடந்த 13.09.2022 அன்று கடிதம் ஒன்றை அனுப்பினார். மேற்படி கடிதத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட தேதி முதல் மீண்டும் பணி வழங்கும் தேதி வரை பின் சம்பளம் கணக்கிட்டு வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். மேலும் மீண்டும் தனக்கு பணி வழங்கக் கோரி கடந்த 14.09.2022ம் தேதியிட்ட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். எதிர்மனுதாரர் நிர்வாகம் 19.09.2022ம் தேதியிட்ட கடிதம் ஒன்றை மனுதாரருக்கு அனுப்பியுள்ளது. அதில் மனுதாரர் முதுநிலை எழுத்தர் என்பதற்கு உரிய அனுமதி பெற்ற ஆணையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டது. கடந்த 22.09.2022 தேதியிட்டு 26.09.2022ல் கிடைக்கப்பெற்ற உத்தரவில் எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள அனுமதித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் 28.09.2022 அன்று மனுதாரர் மீண்டும்

பணியில் சேர்ந்துகொண்டார். கடந்த 03.10.2022 அன்று மனுதாரர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக உள்ளக விசாரணை ஒன்றை நடத்த திட்டமிட்டு விசாரணை அதிகாரியாக ஓய்வு பெற்ற கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் திரு. பெரியசாமி என்பவர் நியமிக்கப்பட்டார். கடந்த 06.10.2022 அன்று தனக்கு மீண்டும் பணி வழங்கக் கோரி மனுதாரர் கடிதம் ஒன்றை அனுப்பினார். விசாரணை அதிகாரி 21.10.2022 அன்று மதியம் 2 மணியளவில் விசாரணையை துவக்கவுள்ளதாகவும், அதனில் கலந்துகொள்ளும்படியும் மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களின் சீராய்வு மனுவில் பிறப்பித்த தீர்ப்புரையை செயல்படுத்துதல் தொடர்பாக மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி உத்தரவைப் பெற்றுக்கொண்ட மனுதாரர், எதிர்மனுதாரர் நிர்வாகம் கடந்த 13.10.2022 முதல் பணி வழங்க மறுத்து வருவதாகவும், உடனடியாக ஊதியம் கணக்கிட்டு வழங்கவேண்டுமென்றும் அவர் போதிய ஆவணங்களை வழங்காமலும் உள்ளக விசாரணையை நடத்த

தீர்மானித்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்பதால் தனக்கு வாய்ப்பு வழங்கக் கோரி 14.10.2022 அன்று கடிதம் ஒன்றை அனுப்பினார். மேற்படி கடிதத்தைப் பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நிர்வாகம் 17.10.2022 முற்பகல் முதல் மீண்டும் பணி வழங்கியது. அன்றைய தினமே மனுதாரர் பணிசேர் அறிக்கை சமர்ப்பித்து பணியில் சேர்ந்துள்ளார். மேற்படி உள்ளக விசாரணையில் குற்றம் சாட்டப்பட்ட மனுதாரர், தன் தரப்பில் வாக்குமூலம் சமர்ப்பிக்கவோ, சாட்சிகள் விசாரிக்கவோ வாய்ப்பு எதையும் வழங்காமல் 16.12.2022 அன்று எவ்வித முன்னறிவிப்புமின்றி உள்ளக விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. உள்ளக விசாரணை முறையாக நடத்தப்படவில்லை என்பது குறித்து 21.10.2022, 07.11.2022, 25.10.2022, 13.11.2022, 21.11.2022, 04.12.2022 ஆகிய தேதிகளில் மனுதாரர் கடிதங்களை அனுப்பியுள்ளார். விசாரணை அதிகாரி வழங்கிய முடிவிற்கு விளக்கம் சமர்ப்பிக்கக் கோரி கடந்த 29.12.2022 தேதியிட்டு எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு கடிதம் ஒன்று அனுப்பியது. இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு தனது விளக்கத்தினை சமர்ப்பிக்க 15 நாட்கள் கால அவகாசம் கோரி

மனுதாரர் கடந்த 05.01.2023 அன்று கடிதம் ஒன்றை அனுப்பினார். மேற்படி கடிதத்தினைப் பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நிர்வாகம் 11.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 7 நாட்கள் மட்டும் கால அவகாசம் வழங்கி கடிதம் ஒன்று அனுப்பியது. அதனைத் தொடர்ந்து 17.01.2023 அன்று மனுதாரர் தனக்கு மீண்டும் கால அவகாசம் வேண்டுமென்று கூறி கடிதம் அனுப்பியுள்ளார். அதனைத் தொடர்ந்து கடந்த 23.01.2023 அன்று மனுதாரர் இரண்டாம் கோரும் அறிவிப்பிற்கு தனது விளக்கத்தினை சமர்ப்பித்த பிறகும் நிர்வாகம் மனுதாரரை 01.02.2023 தேதியிட்ட உத்தரவின்படி நிரந்தர பணிநீக்கம் செய்தது. மனுதாரர் தனது பணிநீக்கத்தை எதிர்த்து சமரச அதிகாரி/தொழிலாளர் உதவி ஆணையாளர் முன்பு தொழிற்தாவா ஒன்றை எழுப்பினார். மேற்படி தொழிற்தாவா சமரச பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட எதிர்மனுதாரர் நிர்வாகம் தொடர்ந்து பல்வேறு காரணங்களைக் கூறி சமரசத்திற்கு ஒத்துழைப்பளிக்காமல் கால தாமதம் செய்து வந்தது. எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் பிடிவாதப் போக்கினால் சமரசம் ஏற்படாமல் சமரச முறிவறிக்கை கடந்த 10.07.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. எனவே

மனுதாரர், எதிர்மனுதாரர் நிர்வாகம் பிறப்பித்த 01.02.2023 தேதியிட்ட பணிநீக்க உத்தரவு சட்டவிரோதமானது என்பதால் அதனை நீக்கறவு செய்யவும், முழு பின்சம்பளத்துடனும், இதர அனைத்து பலன்களுடனும் எதிர்மனுதாரர் நிர்வாகம் பணி வழங்க வேண்டுமென்று வேண்டுகிறார்.

3. **எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரை சுருக்கம்:-**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் யாவும் பொய்யானது. மனுதாரர் பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பணி புரிந்து வந்த நிலையில் 04.12.2000ம் தேதிய கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. 7811/2000/கி.9-ன்படி பொள்ளாச்சி சூடாமணி பண்டகசாலையின் 07.12.2000 மற்றும் 18.12.2000ம் தேதிய சூடாமணி மேலாண்மை இயக்குநரின் கடித அடிப்படையில் மனுதாரர் 23.12.2000ம் தேதிய முற்பகல் முதல் எதிர்மனுதாரர் சங்கத்தில் விற்பனையாளராக பணியில் சேர்க்கப்பட்டார். மனுதாரர் பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பணி புரிந்த போதே மனுதாரர் பலமுறை எச்சரிக்கப்பட்டு ஒழுங்கு

நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 20.01.1993-ம் தேதியில் எந்தவிதமான தகவலுமின்றி நியாயவிலைக் கடையை காலையிலிருந்தே மனுதாரர் திறக்காமல் விடுப்பும் தெரிவிக்காமல் இருந்ததால் எச்சரிக்கப்பட்டு 22.01.1993ம் தேதியிட்ட தனி அலுவலரின் குறிப்பாணை மூலம் ஒரு நாள் சம்பளத்தினை மனுதாரருக்கு நிறுத்தி தண்டனை வழங்கி மனுதாரர் மன்னிப்பு கோரியதால் மீண்டும் பணிக்கு அனுமதிக்கப்பட்டார். மனுதாரரால் பண்டகத்தில் ரூ. 4,747.30/- இருப்பு குறைபாடு நியாயவிலைக் கடையில் ஏற்பட்டதால் மனுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 25.06.1993ம் தேதியில் குறிப்பாணை வழங்கப்பட்டு 30.06.1993ம் தேதிய மனுதாரரின் விளக்கம் ஏற்கப்பட்டு மனுதாரர் புரிந்த குற்றத்தை கருணை அடிப்படையில் மன்னித்து மூன்று மாத கால ஊதிய உயர்வை ரத்து செய்தும், தற்காலிக பணி நீக்க காலத்தை சம்பளம் இல்லா விடுப்பாக அனுமதித்தும் மனுதாரருக்கு தண்டனை வழங்கப்பட்டு நியாய விலைக் கடை பணி தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்பதற்காக மனுதாரர் மீண்டும் 02.07.1993 முதல் பணியில் சேர்க்கப்பட்டார். எதிர்மனுதாரர் சங்கத்தில் மனுதாரர்

சட்ட மீறலுக்காக 08.12.2005ம் தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டு, 02.02.2006 வரையிலான 57 நாட்கள் பணி நீக்க காலத்தினை ஈட்டிய விடுப்பாக வழங்கப்பட்டு, மனுதாரர் மீது எதிர்மனுதாரர் தனி அலுவலர் அவர்களால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் மன்னிப்பு கோரியதால் மீண்டும் 03.02.2006ம் தேதி முதல் மனுதாரர் எதிர்மனுதாரரால் எச்சரிக்கப்பட்டு பணியில் சேர்க்கப்பட்டார். மனுதாரர் 12.07.2002ம் தேதிய பொள்ளாச்சி சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க. 4296/2002/வே.சே.ச-1ன் படி விற்பனையாளர் நிலையிலிருந்து எழுத்தராக 19.07.2002ன் படி பதவி உயர்வு பெற்றார். இந்நிலையில் தனி அலுவலர் சங்கத்தின் பணியாளர்களில் பணி மூப்பு நிலையை கருத்தில் கொள்ளாமல் தன்னிச்சையாக செயல்பட்டு துணைப் பதிவாளர் அனுமதி பெறாமல் திரு. டி. ஈஸ்வரன் எழுத்தருக்கு சங்க தீர்மானம்-1 நாள் 17.04.2007ன்படி முது நிலை எழுத்தராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. துணைப்பதிவாளர் அனுமதியின்றி சங்கத் துணை விதிகளுக்கும், கூட்டுறவு சங்கங்களின் சட்ட விதிமுறைகளுக்கும் முரணாக சங்கத் தனி அலுவலரால்

மனுதாரருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட ஆணை ரத்து செய்யப்பட்டு திருமதி. எஸ். மனோன்மணி என்பவருக்கு பணி மூப்பில் இளையவராக வைக்கப்பட்டார். மேற்படி உத்தரவினை எதிர்த்து மனுதாரர் கோயம்புத்தூர் மண்டல இணைப்பதிவாளர் முன்பு தொடர்ந்த சீராய்வு மனு எண்9704/2011/வே2ல் நடுநிலைமையுடன் ஆராய்ந்த மேதகு இணைப்பதிவாளர் 16.02.2012ம் தேதியில் மனுதாரருக்கு வழங்கிய பதவி உயர்வு, ஊதிய உயர்வு, ஊதிய நிர்ணயம் ரத்து செய்யப்பட்டது ஏற்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தார். மனுதாரர் அதனைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த நீதிப் பேராணை எண். 17380/2012 ல் 06.07.2012ம் தேதியில் Status quo உத்தரவு பிறப்பித்ததால் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு முதுநிலை எழுத்தர் என்ற பதவி உயர்வு உள்ளிட்ட உதிய உயர்வினை ரத்து செய்ய இயலவில்லை. மேற்படி நீதிப் பேராணையில் சென்னை உயர்நீதிமன்றம் 21.02.2000ல் பிறப்பித்த உத்தரவில் மண்டல இணைப்பதிவாளர் சீராய்வு மனு எண். 9704/2011/வே.2ல் பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்து மீண்டும் மேற்காண் சீராய்வு வழக்கினை திருப்பூர்

மண்டல இணைப்பதிவாளர் ஆறு வாரங்களுக்குள் நடத்தி முடிவு காண அறிவுறுத்தப்பட்டு முடிவு கட்டப்பட்டது. மேற்படி உத்தரவின் பேரில் திருப்பூர் மண்டல இணைப் பதிவாளர் 08.04.2021ல் மனுதாரரைப் பணி மூப்பில் ஒரு வருடம் நான்கு மாதம் ஏழு நாட்கள் இளையவராக வைத்துக் கொள்ளவும், முதுநிலை எழுத்தருக்குரிய ஊதியம் பெற்ற மனுதாரரிடமிருந்து அதிகமாக வழங்கப்பட்ட ஊதியத்தினை வசூலிக்கவும் உத்தரவு பிறப்பித்தார். மேற்படி உத்தரவை எதிர்த்து மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை எண். 12139/2021-ஐ தொடர்ந்துள்ளதாக 29.05.2021ம் தேதியிட்டு மனுதாரரின் வழக்குரைஞர் அனுப்பிய அறிவிப்பு மட்டுமே எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான அழைப்பாணையும் கிடைக்கப்பெறவில்லை. மனுதாரர் இணைப்பதிவாளரின் செயல்முறை ஆணையின் படி பொள்ளாச்சி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்திலும், ராவத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் மறுபரவல் முறையில் பணி மாறுதல் செய்யப்பட்டு பணிபுரிந்து

வந்தார். மேற்படி சங்கங்களில் பணிபுரிந்த போது 27.02.2011 மற்றும் 28.02.2011 ஆகிய தேதிகளில் எவ்வித தகவலுமின்றி பணிக்கு வராமலும் 01.03.2011 முதல் 09.03.2011 மற்றும் 21.06.2011 முதல் 13.07.2011 ஆகிய தேதிகளில் ஈட்டிய விடுப்பு எடுத்தும் வந்தார். இந்நிலையில் ராவத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டு பணி புரிந்து வந்த போது 16.12.2011ம் தேதியில் மது அருந்திவிட்டு பொள்ளாச்சி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஒரு பெண்ணுடன் தகாத வார்த்தைகளில் பேசி, திட்டி மிரட்டியுள்ளார். இது தொடர்பாக மனுதாரர் மீது பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண். 785/2011ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இத்தகைய சூழலில் எதிர்மனுதாரர் சங்க தனி அலுவலர் அவர்களால் மனுதாரர் 19.12.2011 முதல் 13.03.2012 வரை தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார். மேற்படி ஒழுங்கு நடவடிக்கையில் இறுதியாக 12.03.2012ம் தேதியில் இனி வரும் காலங்களில் அனுமதியின்றி பணிக்கு வராமல்

இருக்கக்கூடாது என எச்சரிக்கப்பட்டு ஆறு மாத கால ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்தும் தற்காலிக பணி நீக்க காலமான 19.12.2011 முதல் 13.03.2012 வரையிலான காலம் ஈட்டிய விடுப்பிலிருந்து கழிக்கப்பட்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் 14.03.2012 முதல் 08.06.2012 வரை எதிர்மனுதாரர் சங்கத்தில் பணிபுரிந்து வந்தார். பின்னர் இணைப்பதிவாளரின் செயல்முறை ஆணையின்படி கோயம்புத்தூர் மாவட்ட வழக்குரைஞர் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டு 09.06.2012 முதல் 14.09.2012 வரை பணிபுரிந்து வந்த நிலையில் 16.09.2012 முதல் 30.10.2012 வரையில் 46 நாட்கள் மருத்துவ விடுப்பில் மனுதாரர் இருந்து வந்ததுடன் இதைப் போலவே 22.12.2013 வரையில் அவ்வப்போது சொற்ப நாட்களே பணிக்கு வந்த மனுதாரர் அதிகமான நாட்களில் மருத்துவ விடுப்பிலும், எவ்வித தகவலுமின்றி பணிக்கு வராமலும், சம்பளமில்லா விடுப்பிலுமே தொடர்ந்து வந்ததால் எதிர்மனுதாரரின் சங்க இதர பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக்கப்பட்டனர். எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இறுதித் தணிக்கை 2012-2013ன் குறைகள் தொகுப்பில் உள்ள மனுதாரர் மீதான

குறைகளை முன்னிறுத்தி 16.12.2013ம் தேதியிட்டு மீண்டும் ஒரு குற்றச்சாட்டு வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டதனைப் பெற்றுக் கொண்ட மனுதாரர் விளக்கம் எதுவும் வழங்காதநிலையில் தொடர்ந்து நிர்வாகத்திற்கு எதிராக செயல்பட்டதால் பல முறை எச்சரிக்கப்பட்டும் பொறுப்புடன் செயல்படாததால் 23.12.2013ம் தேதி முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் மனுதாரருக்கு 19.03.2014ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதற்கு மனுதாரர் 28.03.2014ம் தேதியிட்டு விளக்கம் வழங்கி பின்னர் 08.05.2014ம் தேதியில் எதிர்மனுதாரர் சங்கத்திற்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் எதிர்மனுதாரரின் சங்க தலைவரை மிரட்டும் தோனியில் பேசியுள்ளார். மேற்படி செயலையும் உள்ளடக்கி மீண்டும் மனுதாரருக்கு 08.05.2014ம் தேதியிட்டு கூடுதல் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதைப் பெற்றுக் கொண்ட மனுதாரர் விளக்கம் வழங்க ஒரு மாத கால அவகாசமும், மேலும் விளக்கம் வழங்க ஆவணங்களையும் கோரியுள்ளார். பின்னர் 26.06.2014ம் தேதியிட்டு மனுதாரர் தனது விளக்கத்தினை வழங்கினார்.

மனுதாரரின் விளக்கம் போதுமானதாக இல்லாததால் உள்ளக விசாரணை மேற்கொள்ள உள்ளது குறித்தும், விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டது குறித்தும் மனுதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 23.08.2014ம் தேதியிட்டு மனுதாரர் கடிதம் வழங்கியுள்ளார். அதனைப் பரிசீலித்த எதிர்மனுதாரர் மனுதாரரின் தற்காலிக பணிநீக்க உத்தரவை மட்டும் ரத்து செய்து கருணையின் அடிப்படையில் 01.09.2014ம் தேதி முதல் பணியில் சேர அறிவுறுத்தப்பட்டதனை ஏற்றுக்கொண்டு மனுதாரர் 01.09.2014ம் தேதியிட்டு பணிசேர் அறிக்கையுடன் பணியில் சேர்க்கப்பட்டார். மனுதாரருக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைகள் மீது ஒழுங்கு நடவடிக்கை தற்போது வரை நிலுவையில் தான் உள்ளது. மனுதாரர் முதுநிலை பட்டப்படிப்பு முடித்துள்ளதாக தெரிவித்து ஊதிய உயர்வு பெற்றுள்ளார். மனுதாரரின் படிப்பு சம்பந்தமான சான்றிதழ் கோரி 30.06.2014ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு கடிதம் வழங்கப்பட்டது. மனுதாரர் இதுவரை படிப்பு குறித்த ஆவணங்களை வழங்கவில்லை. எனவே ஊதிய உயர்வு பெற தெரிவித்த படிப்பு சம்பந்தமான ஆவணங்கள் போலியானவைகளாக இருக்குமோ

என்ற சந்தேகம் எதிர்மனுதாரருக்கு எழுகிறது.

4. மனுதாரர் 23.12.2013ம் தேதி முதல் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்த காலத்தில் உரிய பிழைப்பூதியம் மனுதாரருக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் வழங்கி ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் 23.12.2013 முதல் 28.08.2014 வரையில் பணி நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு எதிர்மனுதாரர் பிழைப்பூதியம் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ள விவரம் தவறானதாகும். 29.09.2014 ம் தேதிய இணைப்பதிவாளரின் செயல்முறை ஆணையின்படி கோவை மின் திட்ட பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்திற்கு மறு பரவல் முறையில் பணிபுரிந்த மனுதாரர் 02.02.2016ம் தேதியுடன் அங்கிருந்து பணி மாறுதலாகி 03.02.2016ம் தேதி முதல் 28.02.2016ம் தேதி வரையில் எதிர்மனுதாரர் சங்கத்தில் பணிபுரிந்து வந்தார். பின்னர் மனுதாரர் 01.03.2016 முதல் 05.03.2016 வரையில் தற்செயல் விடுப்பும், 07.03.2016 முதல் 10.03.2016 வரை தற்செயல் விடுப்பும், 14.03.2016 முதல் 19.03.2016 வரையில் தற்செயல் விடுப்பும், 21.03.2016 முதல் 24.03.2016 வரையில் மருத்துவ

விடுப்பும், 28.03.2016 முதல் 20.05.2016 வரையில் மருத்துவ விடுப்பும், 21.05.2016 முதல் 31.05.2016 வரையில் மருத்துவ விடுப்பும், 01.06.2016 முதல் 10.06.2016 வரையில் தற்செயல் விடுப்பும், 01.06.2016 முதல் 10.06.2016 வரை தற்செயல் விடுப்பும் மற்றும் 12.06.2016 முதல் 28.06.2016 வரையில் தொடர்விடுப்பும் எடுத்துள்ளார். மேலும் 01.07.2016 முதல் 11.06.2018 வரையில் எவ்வித தகவலுமின்றி தொடர்ந்து பணிக்கு வராமல் இருந்த மனுதாரர் இடையே 11.03.2016 முதல் 13.03.2016 வரையில் மட்டுமே பணிக்கு வந்தார். இதனைத் தொடர்ந்து எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 27.04.2016ம் தேதியிட்ட கடிதம் மூலம் மருத்துவ விடுப்பு நிலுவை ஏதும் தங்களது கணக்கில் நிலுவை இல்லாத நிலையில் 07.03.2016ம் தேதியிலிருந்து உள்ள தொடர் விடுப்பு விண்ணப்பம் நிலுவையில் உள்ள சம்பளமில்லா விடுப்பாக கருதப்படும் என தெரிவித்து. இந்நிலையில் மனுதாரரே 01.06.2016 முதல் 12.06.2016ம் தேதி வரையிலான காலத்திற்கு பணிக்கு வராமல் இருந்துவிட்டு தற்காலிக பணி நீக்கமாக கருதி பிழைப்பூதியம் கோரி மனுதாரர் தொழிலாளர் துணை ஆணையாளர் (பணிக்கொடை) அவர்கள்

முன்பாக தொடர்ந்துள்ள பிழைப்பூதிய வழக்கு எண். 20/2019 தற்போதும் விசாரணையில் நிலுவையில் உள்ளது. பின்னர் மனுதாரர் 01.04.2019 முதல் 05.04.2019 வரையில் சிறு விடுப்பு எடுத்துக் கொண்ட பின் 08.04.2019ம் தேதியில் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு உரப்பொறுப்பு வழங்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட மனுதாரர் 09.04.2019 முதல் 12.04.2019 வரையில் எந்தவிதமான தகவலுமின்றி பணிக்கு வரவில்லை. பின் 15.04.2019 மற்றும் 16.04.2019 ஆகிய தினங்களில் சிறு விடுப்பு எடுத்துக் கொண்ட மனுதாரர் பின் 20.04.2019 முதல் 29.09.2019 வரையில் எந்தவிதமான தகவலுமின்றி பணிக்கு வரவில்லை. மேலும் 27.05.2019 முதல் 05.06.2019 வரையிலான காலத்திற்கு மருத்துவ விடுப்பு கோரிய மனுதாரரின் 27.05.2019ன் தேதிய கடிதத்திற்கு எதிர்மனுதாரரால் 03.06.2019ம் தேதியிட்ட கடிதத்தில் நடப்பாண்டில் சிறு விடுப்பினை தவிர எந்த விதமான விடுப்பும் நிலுவையில் இல்லை என தெரிவித்து மேற்காண் விடுப்புக் காலம் “வேலையில்லாத நாட்களுக்கு ஊதியம் இல்லை” என்றே கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 17.07.2019ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் மனுதாரரின்

ஒழுங்கீன செயல்கள் குறித்தும் 21.06.2019 முதல் எந்தவிதமான தகவலுமின்றி பணிக்கு வராதது குறித்தும் எந்தவிதமான விடுப்புகளும் மனுதாரருக்கு நிலுவை இல்லாததால் மனுதாரரினை வேலையில் இல்லாத நாட்களுக்கு ஊதியம் இல்லை என தெரிவித்தும், பணி செய்த நாட்களுக்கு சம்பளம் அவரது சேமப்பு கணக்கில் சேர்க்கப்பட்டது குறித்தும் இணைப்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் மனுதாரரின் கடமை மற்றும் பொறுப்புகளின் நகலையும் அனுப்பியுள்ளது. கோயம்புத்தூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அவர்கள் 07.06.2019ம் தேதிய ஆணையின் மூலம் மறுபரவல் முறையில் மனுதாரர் கோயம்புத்தூர் மாவட்ட சத்துணவு பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்திற்கு மனுதாரரினை மறு பரவல் முறையில் பணிமாறுதல் செய்து உத்தரவு பிறப்பித்ததனைத் தொடர்ந்து மனுதாரர் கோயம்புத்தூர் மாவட்ட சத்துணவு பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தில் 01.10.2019ம் தேதி முதல் பணிக்கு சேர்ந்து அங்கும் சரிவர பணிக்குச் செல்லாமலும், பணியில் தொய்வுடனும் மனுதாரர் பணி புரிந்ததால் மனுதாரருக்கும் சத்துணவு பணியாளர்

சங்கத்திற்குமிடையே தொடர்ந்து பிரச்சனைகள் இருந்து வந்ததால் மனுதாரருக்கு ஊதியம் சட்டப்படியாக வழங்க வேண்டிய சூழல் இல்லாததால் மனுதாரருக்கு ஊதியம் வழங்காததனைத் தொடர்ந்து மனுதாரர் எதிர்மனுதாரரையும் கட்சி சேர்த்து 01.10.2019 முதல் 31.05.2020 வரை ஊதியம் கோரி மேதகு முதன்மை தொழிலாளர் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள கணக்கீட்டு மனு எண். 52/2020 நாளது தேதி வரை நிலுவையில் உள்ளது. பின்னர் 27.01.2021ம் தேதியிட்ட இணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி அழகப்பகவுண்டனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு மாறுதல் செய்யப்பட்ட உத்தரவு மட்டுமே எதிர்மனுதாரர் சங்கத்திற்கு கிடைக்கப்பெற்றது. மனுதாரர் 08.03.2021,31.03.2021-ம் தேதிகளிட்டு இணைப் பதிவாளர் அவர்களுக்கு கடிதம் எழுதி அதன் நகலை எதிர்மனுதாரர் சங்கத்திற்கு அனுப்பியிருந்தார். மனுதாரர் 18.04.2021-ம் தேதியிட்டு மாநில பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் நகலும் எதிர்மனுதாரர் சங்கத்திற்கு அனுப்பியிருந்தார். 20.04.2021ம் தேதியிட்டு மண்டல இணைப் பதிவாளர்

அவர்களின் கடிதம் ந.க. எண். 5725/2020/வே2(2)-ன் படி எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தில் மனுதாரரை அழகப்ப கவுண்டனூர் சங்கத்திற்கு மறு பரவலில் பணியமர்த்தம் செய்த ஆணை ரத்து செய்யப்பட்டு தாய் சங்கத்திற்கு பணியமர்த்தம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிர்மனுதாரருக்கு 20.04.2021-ம் தேதியிட்டு இணைப் பதிவாளர் அனுப்பிய கடிதத்திற்கு எதிர்மனுதாரர் 30.04.2021-ம் தேதியிட்டு பதில் கடிதம் அனுப்பியதில் மனுதாரர் பணிக்கு சேர வரவில்லை என்றும், அவர் பணியில் சேர எங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் தெரிவித்து எதிர்மனுதாரர் கடிதம் அனுப்பியிருந்தார். இந்நிலையில் மனுதாரர் 06.05.2021-ம் தேதியில் எதிர்மனுதாரரால் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட கடமைகளும், பொறுப்புகளும் நிர்ணயித்த கடிதத்தினை வாங்க மறுத்த மனுதாரர் 17.05.2021-ம் தேதியில் அதனை நேரில் பெற்றுக் கொண்டார். ஆனால், 06.05.2021-ம் தேதியில் பணியில் சேர்ந்து கொண்டதாக கடிதத்தினை எதிர்மனுதாரருக்கு வழங்கி பணியில் சேர்ந்து கொண்டார். மேலும், மனுதாரர் மீது 05.04.2019, 08.04.2019-ம் தேதிகளிட்டு மூன்று எதிர்மனுதாரர் சங்க

வாடிக்கையாளர்கள் கொடுத்த புகார்ககளை அடிப்படையாகக் கொண்டு மனுதாரருக்கு 22.04.2019-ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் பதிவுத் தபால் மூலம் அனுப்பபப்பட்ட குறிப்பாணையை பெற்றுக் கொண்ட மனுதாரர் விளக்கம் எதுவும் வழங்கவில்லை. மனுதாரர் 06.05.2021 முதல் 18.05.2021 வரை பணியில் இருந்தார். அதில் 12.05.2021, 13.05.2021 ஆகிய இரு நாட்கள் சிறு விடுப்பு மனுதாரர் எடுத்திருந்தார். மனுதாரர் 19.05.2021 முதல் 21.05.2021 வரையில் சிறு விடுப்பு கோரிய விடுப்பு விண்ணப்பத்தினை காலம் கடந்தே அனுப்பியதால் மனுதாரருக்கு வருகை பதிவேட்டில் தகவல் இல்லை என்றே எதிர்மனுதாரரால் குறிப்பிடப்பட்டிருந்தது. பின், 26.05.2021-ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு பணியில் சேர வலியுறுத்தி அனுப்பிய கடிதத்தினைப் பெற்றுக் கொண்ட மனுதாரர் அதற்கான பதில் எதுவும் அனுப்பாமல் 27.05.2021-ம் தேதியிட்டு மனுதாரர் அனுப்பிய கடிதத்தில் தவறான செய்திகளை உள்ளடக்கி வாகன போக்குவரத்து சீரடைந்தவுடன் நான் நேரில் அலுவலகம் வந்து தங்களிடம் விடுப்பு விண்ணப்பித்தினை சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்திருந்தார். மேலும்,

23.06.2021-ம் தேதியிட்டு பதிவாளருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை எதிர்மனுதாரருக்கு அனுப்பியிருந்ததில் ஆதாரமற்ற சங்கதிகளையே உள்ளடக்கி இருந்தார். பின், 02.07.2021-ம் தேதியிட்டு சீராய்வு மனு ந.க. எண். 1883/2020/ப2-ன் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு மனுதாரர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ஊதிய வித்தியாச தொகை மற்றும் வருங்கால வைப்பு நிதி கடன் தொகையில் நிலுவைத் தொகை கோரி எதிர்மனுதாரர் அனுப்பிய கடிதத்திற்கு 06.07.2021-ம் தேதியிட்டு மனுதாரர் தேவையற்ற காரணங்களை உள்ளடக்கி எதிர்மனுதாரருக்கு கடிதம் எழுதியிருந்தார். எதிர்மனுதாரர் 12.07.2021-ம் தேதியிட்டு 29.06.2016 முதல் 11.06.2018 வரையிலான 713 நாட்களும், 09.04.2019 முதல் 29.09.2019 வரையிலான 174 நாட்கள் மற்றும் சத்துணவு பணியாளர் சங்கத்திலிருந்து எதிர்மனுதாரர் சங்கத்தில் சேர்ந்த 06.05.2021 வரையில் மனுதாரர் எங்கு பணியாற்றினார் என்கிற விவரம் கோரி அனுப்பிய கடிதத்தினை பெற்றுக்கொண்ட மனுதாரர் 19.07.2021ம் தேதியிட்டு எதிர்மனுதாரர் சங்கத்தில் 05.12.2020ல் பணியில் சேர்ந்ததாக தெரிவித்து ஊதியம் கோரி கடிதம்

அனுப்பியிருந்தார். மனுதாரர் 03.08.2021ம் தேதியிட்டு தனித்தனியே இரு கடிதங்களை பொய்யான தகவல்களை உள்ளடக்கி ஊதியம் கோரியும், பணியிடம் கோரியும் கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 06.05.2021ம் தேதியிலேயே பணியிடம் வழங்கி மனுதாரரும் அதே தேதியில் பணிக்கும் சேர்ந்து 17.05.2021ம் தேதியில் கடமை மற்றும் பொறுப்பு குறித்த எதிர்மனுதாரரின் செயல்முறை ஆணைகளையும் பெற்றுக்கொண்டு இடையே விடுப்பு விண்ணப்பங்கள் வழங்கியும், வழங்காமலும், எந்தவிதமான தகவலும் வழங்காமல் பணிக்கு வராமல் இருந்துவிட்டு 03.08.2021ம் தேதிய கடிதத்தில் பணியிடம் கோரியுள்ள மனுதாரரின் செயல்பாடு முன்னுக்குப் பின் முரணானதாகும். மனுதாரர் ஆரம்பம் முதலே சட்ட மீறல்கள் உள்ளிட்ட பெண்கள் பாலியல் வழக்கில் சம்மந்தப்பட்டவராகவே இருந்து வருகிறார் என்பதற்கு மனுதாரர் குறித்து திருமதி. மேரி கலா என்பவர் அவருக்கான பாலியல் கொடுமை சம்மந்தமாக பொள்ளாச்சி காவல் நிலையத்தில் மனுதாரர் மீது புகார் அளித்த விவரம் 08.10.2012ம் தேதிய மாலை மலர் நாளேட்டில் செய்தியாக வந்துள்ளது.

மனுதாரர் தொடர்ந்து பணிக்கு வராமல் வந்ததாகவும், பணி மறுத்ததாகவும் சம்மந்தமில்லாமல் கடிதங்கள் எழுதி எதிர்மனுதாரரின் மனித வளத்தினையும், கால நேரத்தினையும், தேவையற்ற செலவினங்களுக்கு உட்படுத்திய மனுதாரர் எந்தவிதமான தகவலும் இன்றி தொடர்ந்து பல நாட்களாக 19.05.2021-ம் தேதி முதல் விடுப்பு விண்ணப்பமோ, தகவலோ, அறிவிப்போ இன்றி பணிக்கு வராமல் இருந்ததையும், முன்னரே மனுதாரர் பல்வேறு கால கட்டங்களில் எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றியும், பல்வேறு சங்கங்களுக்கு மறுபரவல் முறையில் சென்ற இடங்களிலும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதையே தொடர் செயலாக கொண்டுள்ளதால் மனுதாரர் போன்று பணியாளர்கள் சங்கத்தில் பணியில் இருப்பது சட்ட முரணானது என்பதை முன்னிறுத்தி மனுதாரருக்கு 16.08.2021-ம் தேதியிட்டு வழங்கிய குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்ட மனுதாரர் 19.08.2021-ம் தேதியிட்டு போதுமான விவரங்களை அறிந்திருந்தும் தேவையற்று பல்வேறு ஆவணங்களை கோரி விளக்கம் வழங்காமல் கடிதம் மட்டும் அனுப்பியிருந்தார். எனவே, எதிர்மனுதாரர் மனுதாரரின் தொடர் பணிக்கு

எந்தவிதமான தகவலுமின்றி வராத செயல்களையும், சட்ட மீறல்கள், குற்ற வழக்குகள் ஆகியவற்றை முழுமையாக நுண்ணாய்வுக்கு உட்படுத்தியும், ஏற்கனவே தொடர்ந்து எந்தத் தகவலும் இன்றி 713 நாட்கள் பணிக்கு வராமல் இருந்தது உள்ளிட்ட முந்தைய ஒழுங்கு நடவடிக்கைகளில் மனுதாரர் மன்னிப்பு கோரியும், குடும்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கியும், தொடர்ந்து மனுதாரர் சட்ட மீறல்கள் செயல்களில் ஈடுபட்டு வந்ததால் எதிர்மனுதாரரின் சங்க பணியாளர் சிறப்பு துணை விதிகள் 22 (9) மற்றும் 14(2)ஐ முன்னிறுத்தி இனி மேற்கொண்டு மனுதாரரை எதிர்மனுதாரர் சங்கத்தில் பணியில் வைத்திருப்பது எதிர்மனுதாரரின் சங்கத்தில் பணியாளர்களிடையே நிலவி வரும் ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடுகளுக்கு எதிரானதாகும் என்பதாலும், மனுதாரரின் செயல் மற்ற பணியாளர்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துவிடக் கூடாது என்பதாலும் எதிர்மனுதாரர் சங்கத்திலிருந்து இறுதியாக 03.09.2021ம் தேதி முதல் மனுதாரர் நிரந்தர பணிநீக்கம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் எதிர்மனுதாரரால் 03.09.2021-ம்

தேதியில் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தரவின் மீது கோயமுத்தூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் முன்பாக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 153-ன் கீழ் சீராய்வு மனுவினை தாக்கல் செய்தார். அதனை எதிர்மனுதாரர் எதிருரை, ஆவணங்கள் தாக்கல் செய்து எதிர்கொண்டதனை ஏற்றுக் கொண்ட இணைப் பதிவாளர் சமூகம் அவர்கள் இறுதியாக மனுதாரருக்கு வாய்ப்பளித்து “26.08.2022-ம் தேதியில், 03.09.2021 நாளிட்ட நிரந்தர பணிநீக்கம் செய்து வழங்கப்பட்ட உத்தரவு உள்ளக விசாரணை நடத்தப்படாமலும், ஒழுங்கு நடவடிக்கை நடைமுறையினைப் பின்பற்றாமலும் வழங்கப்பட்ட செயல்முறை ஆணையில் ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளில் வழு ஏற்பட்டுள்ளது. ஆகவே மேற்படி நிரந்தர வேலை நீக்க உத்தரவை ரத்து செய்தும் ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளை வழுவாது கடைபிடித்து உரிய இறுதியாணையினை மூன்று மாதங்களுக்குள் பிறப்பிக்குமாறு சங்க நிர்வாகத் தலைவருக்கு ஆணையிட்டார்”.

5. எதிர்மனுதாரரும், மண்டல இணைப் பதிவாளரின் 26.08.2022-ம் தேதிய உத்தரவினை ஏற்று மனுதாரர் மீது உள்ளக விசாரணை மேற்கொள்ள இருந்த

நிலையில் எதிர்மனுதாரர் 22.09.2022-ம் தேதியிட்டு மனுதாரருக்கு பணி சேர் அறிக்கையுடன் பணியில் சேர அறிவுறுத்தப்பட்டதனைத் தொடர்ந்து மனுதாரரும் 28.09.2022-ம் தேதியிட்டு பணி ஒதுக்குமாறு கோரி கடிதம் வழங்கியிருந்தார். பின், 06.10.2022-ம் தேதியிட்டு மனுதாரர் அனுப்பிய கடிதத்தில் 28-09-2022 முதல் 01.10.2022 வரை தொடர்ந்து பணிக் கோரி வந்ததாகவும் பணி மறுக்கப்பட்டதாகவும் பொய்யான காரணங்களை உள்ளடக்கி அனுப்பிய மனுதாரரின் கடிதம் 10.10.2022-ம் தேதியில் எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பட்டதற்கு 13.10.2022-ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் மனுதாரரின் 06.10.2022-ம் தேதியிட்ட கடிதத்திற்கு மறுப்பு அனுப்பப்பட்டதனை பெற்றுக் கொண்ட மனுதாரர் 14.10.2022-ம் தேதியிட்டு தேவையற்ற அடிப்படை ஆதாரமற்ற காரணங்களை உள்ளடக்கி கடிதத்தினை அனுப்பி இறுதியாக 17.10.2022-ம் தேதியில் பணி சேர் அறிக்கை வழங்கி 17.10.2022-ம் தேதி முற்பகல் முதல் பணியில் சேர்ந்த மனுதாரருக்கு எதிர்மனுதாரரால் 17.10.2022-ம் தேதிய கடிதம் மற்றும் செயல்முறை ஆணை மூலம் பணிப் பொறுப்பு மற்றும்

கடமை மற்றும் பொறுப்புகளும் வழங்கப்பட்டது. மேலும், மனுதாரரின் 14.10.2022-ம் தேதிய கடிதத்திற்கும் எதிர்மனுதாரரால் 20.10.2022-ம் தேதிய கடிதம் மூலம் உரிய விளக்கமும், மறுப்பும் வழங்கப்பட்டது.

6. மனுதாரருக்கு 16.08.2021-ம் தேதியிட்டு எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை மீது உள்ளக விசாரணை மண்டல இணைப் பதிவாளர் அவர்களின் 26.08.2022-ம் தேதிய உத்தரவுக்கு இணங்க மேற்கொள்ள எதிர்மனுதாரர் சங்கம் 03.10.2022-ம் தேதிய தீர்மான எண். 1-ன் படி முடிவு செய்யப்பட்டு விசாரணை அதிகாரி நியமனம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கு எதிர்மனுதாரரின் 03.10.2022-ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு, முதல் உள்ளக விசாரணை 21.10.2022-ம் தேதியில் நடத்த விசாரணை அதிகாரியால் முடிவு செய்யப்பட்டு, அதற்கான 06.10.2022-ம் தேதிய விசாரணை அறிவிப்பை மனுதாரர், எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் விசாரணை அதிகாரியால் சார்வு செய்யப்பட்டு, முதல் விசாரணை 21.10.2022-ம் தேதியில் விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது.

7. உள்ளக விசாரணையானது 07.11.2022, 15.11.2022, 22.11.2022, 05.12.2022, 16.12.2022 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டதில் மனுதாரர் 15.11.2022 தேதிய விசாரணையில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்காமல் உள்ளக விசாரணை அலுவலர் மற்றும் நிர்வாக பிரதிநிதியை மாற்ற வேண்டும் எனவும் அவ்வாறு மாற்றாவிட்டால் உள்ளக விசாரணையில் கலந்துகொள்ள மறுப்பதாகவும், உள்ளக விசாரணை நடவடிக்கை குறிப்பில் கையொப்பமிட மறுத்துவிட்டு பிற்பகல் 3 மணி முதல் 3.30 மணி வரை விசாரணைக்கு ஆஜராகியும் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டார். மனுதாரர் 22.11.2022-ம் தேதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கலந்து கொள்ளாமல் மருத்துவ காரணங்களினால் விசாரணைக்கு கலந்து கொள்ள இயலாது என 21.11.2022-ம் தேதியிட்டு கடிதம் அனுப்பியிருந்தார். இதர மேற்காண் விசாரணை தேதிகளில் கலந்து கொண்டு விசாரணையை முழுமையாக எதிர்கொண்டார். விசாரணை அதிகாரியும் நடுநிலைமையுடன் செயல்பட்டு விசாரணையில் இருதரப்பினருக்கும் முழுமையான வாய்ப்புகள் வழங்கி இறுதியாக இருதரப்பிலும் தாக்கல்

செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் கடிதங்களை உள்ளடக்கி 24.12.2022-ம் தேதியிட்டு விசாரணை அதிகாரி அவர்கள் 56 பக்க முடிவுகளை வழங்கினார். மேற்படி முடிவு அறிக்கை மற்றும் மனுதாரரின் சட்ட மீறல்கள் ஆகியவற்றை பரிசீலனைக்கு உட்படுத்திய நிர்வாகக் குழு மனுதாரருக்கு எந்தவிதமான சாதகமான சூழலும் இல்லாத நிலையில் மனுதாரருக்கு 29.12.2022ம் தேதியிட்டு இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கியது. நிர்வாகம் வழங்கிய கால அவகாசத்தினை பயன்படுத்திக்கொண்ட மனுதாரர் இறுதியாக 23.01.2023ம் தேதியில் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு விளக்கத்தினை வழங்கினார். அதனைப் பரிசீலித்த நிர்வாகம் மனுதாரரை வேறு வழியின்றி மனுதாரரது சட்ட மீறல் செயல்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்பதால் மனுதாரரை 01.02.2023ம் தேதியிட்ட உத்தரவின்படி நிரந்தர பணிநீக்கம் செய்தது. எதிர்மனுதாரர் கூட்டுறவு, தொழிலாளர் நல சட்டங்கள், துணை விதிகள் உள்ளிட்ட எதிர்மனுதாரர் சங்கத்திற்கு பொருந்தக்கூடிய சட்ட நடைமுறைகள், கட்டாய சட்ட விதிகள் முறையாக கடைபிடிக்கப்பட்டுதான் மனுதாரர் மீது ஒழுங்கு

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எதிர்மனுதாரர் கண் துடைப்பு விசாரணையோ, அடிப்படை ஆதார, சாட்சியமற்ற ஒழுங்கு நடவடிக்கையை மனுதாரர் மீது மேற்கொள்ளவில்லை என்பதனை எதிர்மனுதாரர் சங்க ஆவணங்களை பரிசீலித்தால் முழுமையாக தெரிய வரும். விசாரணை அதிகாரி இருதரப்பினருக்கும் அனைத்து வாய்ப்புகளையும், அவகாசங்களையும் போதிய அளவிற்கு வழங்கி நடுநிலைமையுடன் செயல்பட்டு கால இறுதியாக முடிவு அறிக்கையை வழங்கியுள்ளார். விசாரணை முடியும் வரையில் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய மனுதாரர் தற்போது விசாரணை முடிவு மனுதாரருக்கு சாதகமாக இல்லாததால் விசாரணை அதிகாரியின் மீது தெரிவித்துள்ள கண்டனம் ஆதாரமற்றது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக வேலை கோரி கோயமுத்தூர் தொழிலாளர் அலுவலர் அவர்கள் முன்பாக தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 2(ஏ)(1)ல் எதிர்மனுதாரரின் நிலையினை மேதகு கோவை தொழிலாளர் அலுவலர் அவர்கள் முன்பாக பலமுறை எடுத்துரைத்தும், மேதகு தொழிலாளர் அலுவலர் அவர்களின் அறிவுறுத்தலை ஏற்காத நிலையில் மனுதாரரின் பிடிவாதத்தினாலும்,

தொடர்ந்து சமரச பேச்சுவார்த்தைக்கு மனுதாரரே மனு செய்து விட்டு இறுதியாக சமரச பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாததால் கடந்த 10.07.2023-ம் தேதியன்று மேதகு தொழிலாளர் அலுவலர் அவர்களால் மனுதாரரின் மனு ந.க. எண். 144/2023-ல் தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 12 (4)-ன் படி சமரச முறிவு அறிக்கையினை வழங்கினார். மனுதாரர் மீது மேற்கொண்ட சட்ட நடவடிக்கைகள் சரியானதே என்பதனை ஆராய்ந்து முடிவு கண்டு மனுதாரரின் அடிப்படை ஆதாரமற்ற மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் எதிர்மனுதாரர் வேண்டுகிறார்.

8. **கூடுதல் எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், பொருண்மைகளின் அடிப்படையிலும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் மனுவில் கூறியுள்ள விஷயங்கள் யாவும் பொய்யானது. மேலும் மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களை மனுதாரரே தகுந்த, உறுதியான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவராவார். பொள்ளாச்சி சரக துணைப் பதிவாளர் எதிர்மனுதாரர்

சங்கத்தில் மனுதாரருக்குரிய அனைத்து ஆவணங்களையும் முழுமையாக நுண்ணாய்வுக்கு உட்படுத்தியே இறுதி முடிவினை எய்தி மனுதாரருக்கு சட்டவிரோதமாக வழங்கப்பட்ட முதுநிலை எழுத்தர் என்ற பதவி உயர்வு ரத்து செய்யப்பட்டு மனுதாரர் எழுத்தர் பதவிக்கே உரியவர் என முடிவுகட்டப்பட்டது. பொள்ளாச்சி சரக துணைப் பதிவாளர் அவர்களால் ந.க.எண். 685/2009ன்படி மனுதாரருக்கு சட்ட முரணாக வழங்கிய முதுநிலை எழுத்தர் பதவி உயர்வு ரத்து செய்யப்பட்டதனை எதிர்த்து மனுதாரர் தொடர்ந்துள்ள மேல்முறையீட்டு வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நாளது தேதி வரை முடிவு எய்தப்படாமல் நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர் சங்கத்தில் பணிபுரியும் பட்சத்தில் எதிர்மனுதாரர் சங்க துணை விதிகள் உள்ளிட்ட கூட்டுறவு சங்கங்கள் சட்டப்படி எதிர்மனுதாரர் சங்கத்தின் தலைமையிட எல்லைக்கு உட்பட்டு தான் குடியிருக்க வேண்டும். அவ்வாறு குடியில்லாத பட்சத்தில் வீட்டு வாடகைப் படி தொகை பெற பணியாளர்கள் தகுதியற்றவர் ஆவார். ஆனால் மனுதாரர் எதிர்மனுதாரர் சங்கத்தில் பணிபுரிந்த காலத்தில் தலைமையிடத்தில் இல்லாமலேயே வீட்டு வாடகைப்படி

பெற்றுள்ளார். அதனையும் உள்ளடக்கியே மனுதாரர் பணிப்பயன் உள்ளிட்ட நிதிப் பயனை கோரியுள்ளார். ஆகவே மனுதாரரின் வீட்டு வாடகைப்படி உள்ளடக்கியதால் நேரடியாகவே தள்ளுபடி செய்ய ஏற்புடையதாகும். மனுதாரர், போக்குவரத்து முற்றிலுமாக தடை செய்யப்பட்டதால் பணிக்கு வர இயலவில்லை என்ற விவரம் பொய்யானதாகும். அரசு உள்ளிட்ட அரசுத் துறை சார்ந்த பணியாளர்கள் பணிக்கு சென்று வர உரிய கெரோனா கட்டுப்பாட்டுடன் அரசு போக்குவரத்து கழகம் போக்குவரத்தினை அனுமதித்திருந்தது. மனுதாரர் கோரிய அனைத்து ஆவணங்களையும் முழுமையாக வழங்கி உரிய ஒப்புதல் பெற்று போதிய வாப்புகளுக்கு அதிகமாகவே வாய்ப்புகள் வழங்கி மனுதாரரின் ஒப்புதலுடனே இறுதியாக உள்ளக விசாரணை முடிக்கப்பட்டது. மனுதாரரும் உள்ளக விசாரணையில் கலந்துகொண்டு போதிய காலகெடுவிற்கு அதிகமான காலக் கெடுவினை கேட்டுப் பெற்று அவர் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்து விளக்கம் மற்றும் வாக்குமூலங்களை வாய் மொழியாகவும், எழுத்துமுலமாகவும் வழங்கி நிர்வாக பிரதிநிதியை குறுக்குவிசாரணை செய்தும் இறுதியாக

விசாரணையை முடித்து முடிவுகள் வழங்க மனுதாரரே கோரியதன் அடிப்படையில் இருதரப்பினரின் ஒப்புதலுடனே விசாரணை அதிகாரி சமநிலையுடன் செயல்பட்டு உள்ளக விசாரணையை முடிவு கட்டி முடிவுகளை வழங்கினார். மனுதாரர் உள்ளக விசாரணையை காலம் கடத்தும் நோக்குடனே பல்வேறு தேதிகளில் அனுப்பிய கடிதங்களுக்கு எதிர்மனுதாரரும் உடனுக்குடன் பதில் வழங்கி உள்ளக விசாரணையை எதிர்மனுதாரர் மேற்கொண்டார். மனுதாரரின் விசாரணை அதிகாரி நடுநிலை தவறி நடந்து கொண்டார் என்ற கூற்று பொய்யானது. அவ்வாறிருப்பின் மனுதாரர் உள்ளக விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே எழுத்து மூலமான ஆட்சேபனையை பதிவு தபால் மூலம் அனுப்பியிருக்கலாம். மனுதாரர் தெரிவித்துள்ளபடி 10.05.2021 முதல் 04.07.2021 வரையிலான கால கட்டம் முழுப் பொது முடக்க காலமாக அரசு அறிவித்திருப்பினும் அத்தியாவசிய தேவைகளை முன்னிறுத்தும் கூட்டுறவு துறைக்கு 13.02.2023ம் தேதிய அரசாணை எம்.எஸ்.எண்.62-ல் வரிசை எண். 4(1)ன் படி கூட்டுறவு துறை மேற்காண் அரசாணையிலிருந்து விலக்களிக்கப்பட்டதாகும் என்பதை மனுதாரர்

தெரிந்துகொண்டே 06.05.2021 முதல் 18.05.2021 வரையில் 12.05.2021, 13.05.2021 ஆகிய தேதிகளில் விடுப்பு எடுத்து இதர நாட்கள் எதிர்மனுதாரர் சங்கத்தில் பணிபுரிந்துள்ளார். பின்னர் 19.05.2021 முதல் 16.10.2022ம் தேதி வரை எவ்விதமான முன்னறிவிப்போ,அனுமதியோ, விடுப்பும் இன்றி பணிக்கு வரவில்லை. அத்துடன் மனுதாரர் வீட்டு வாடகைப் படி ஊதியத்துடன் பெறுவதால் மனுதாரர் எதிர்மனுதாரரின் சங்க செயல் எல்லையின் தலைமையிடத்தில் தான் வசித்து வர வேண்டும் என்பதை கூட்டுறவு சங்கங்களின் சட்டம் உள்ளிட்ட எதிர்மனுதாரர் சங்க துணை விதிகளின்படி அவசியம் மனுதாரர் பின்பற்றினால் மட்டுமே வீட்டு வாடகைப் படி பெற மனுதாரர் தகுதியுடையவராவார். மனுதாரர் எதிர்மனுதாரர் சங்கத்தின் தலைமையிடத்தில் வசிக்காமல் கோவையிலிருந்து பணிக்கு வந்து எதிர்மனுதாரர் சங்க சட்டம் மற்றும் துணை விதிகளைப் பின்பற்றாமல் புறந்தள்ளி பணியில் சேர்ந்த காலம் முதலே வீட்டு வாடகைப் படியை ஊதியத்துடன் சட்ட முரணாக பெற்று வந்துள்ளார். ஆகவே எதிர்மனுதாரர் மனுதாரர் மீது மேற்கொண்ட சட்ட நடவடிக்கைகள் சரியானதே என்பதனை

ஆராய்ந்து முடிவு கண்டு மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறார்.

9. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தொ.சா.ஆ. 1 முதல் தொ.சா.ஆ. 139 வரையிலான ஆவணங்கள் ஒப்புதலின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நிர்வாகத் தரப்பில் நி.சா.ஆ. 1 முதல் நி.சா.ஆ. 74 வரையிலான ஆவணங்கள் ஒப்புதலின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளன

10. இரு தரப்பு வாதங்களையும் நீதிமன்றம் கவனமாக பரிசீலித்தது. இந்த வழக்கில் தொடர்புடைய சர்ச்சையை திறம்பட தீர்ப்பதற்கு பின்வரும் முதல்நிலை எழுவினாக்கள் வனையப்படுகின்றன.

. **<u>முதல்நிலை எழுவினாக்கள் :-</u>**

1. உள்ளக விசாரணை சரியாகவும் முறையாகவும் நடந்துள்ளதா?
2. உள்ளக விசாரணை அதிகாரியின் முடிவு அறிக்கை ஒரு சார்புடையதா மற்றும் நெறி பிறழ்ந்துள்ளதா?

11. **<u>எழுவினா 1 மற்றும் 2க்கான தீர்வு :-</u>**

எதிர்மனுதாரர் நிறுவனம் மலையாண்டிப்பட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமாகும். அதில் மனுதாரர் ஈஸ்வரன் கடந்த 1991ம் ஆண்டு விற்பனையாளராகப் பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் 2002ம் ஆண்டு எழுத்தராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அதன் பின்பு 17.04.2007ல் தான் முதுநிலை எழுத்தராக பணி உயர்வு பெற்றதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே 07.10.2011 அன்று மனுதாரரின் பதவி உயர்வு ரத்து செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த தீர்வு கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களால் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து மனுதாரர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை எண். 17380/2012ஐ தாக்கல் செய்து அது நிலுவையில் இருப்பதை அறிய முடிகிறது. அதில் இணைப்பதிவாளர் பிறப்பித்த 16.02.2012 தேதியிட்ட உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்து மனுதாரர் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட அதே நிலையில் பணி தொடர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டதாக மனுதாரர் நிலைப்பாடு எடுத்துள்ளார்.

மேற்சொன்ன உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தொ.சா.ஆ. 14 ஆக உள்ளது. மனுதாரரின் ஊதிய உயர்வு ரத்து செய்யப்பட்ட தனி அலுவலரின் 07.10.2011 தேதியிட்ட செயல் ஆணை தொ.சா.ஆ. 13 ஆக உள்ளது. மனுதாரர் தரப்பு வாதத்தின்படி முறையற்ற நியமனத்தின் வாயிலாக பணி நியமனம் செய்யப்பட்டதாக சொல்லப்படும் திருமதி. மனோன்மணி என்பவரை நிர்வாகம் சட்ட விரோதமாக பதவி உயர்வு செய்ய எத்தனித்ததன் விளைவாகவே தான் தொடர்ந்து பழிவாங்கப்படுவதாக மனுதாரர் நிலைப்பாடு எடுத்துள்ளார்.

12. மனுதாரர், தான் பழி வாங்குதல் நடவடிக்கையின் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர் நிர்வாம் அல்லாத பிற சங்கங்களுக்கு மறுபரவலின் மூலம் பல்வேறு இடங்களுக்கு பணி மாறுதல் செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இதற்கிடையே மனுதாரர் முறையாக பணிக்கு வரவில்லை என்ற காரணங்களின் அடிப்படையில் நிர்வாகம் கடந்த 03.09.2021 அன்று நிரந்தர பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டதாகத் தெரிகிறது. அந்த உத்தரவு தொ.சா.ஆ. 105 ஆக உள்ளது. மனுதாரர் தரப்பில் எந்தவித உள்ளக விசாரணையையும் நடத்தாமல், தான்

நிர்வாகத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டது குறித்து சங்கங்களின் இணைப் பதிவாளர், கோயம்புத்தூர் அவர்களுக்கு தொ.சா.ஆ. 106 சீராய்வு மனு தாக்கல் செய்ததாக அறியமுடிகிறது. அதில் விசாரணை நடைபெற்று முந்தைய பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்பட்டு மீள் விசாரணைக்கு உத்தரவிட்டதாக தொ.சா.ஆ. 109 உத்தரவின் வாயிலாக அறியமுடிகிறது. அதன் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர் நிர்வாகம் பிறப்பித்த உள்ளக விசாரணையே தற்போதைய வழக்கின் பொருண்மையாக அமைந்துள்ளது.

13. மனுதாரர் ஒழுங்காக பணிக்கு வரவில்லை என்கிற வகைக்கு குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு பதில் பெறப்பட்டு தொ.சா.ஆ. 109 சீராய்வு மனு உத்தரவுப்படி உள்ளக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு ஓய்வு பெற்ற துணைப்பதிவாளர் ஆர்.பெரியசாமி அவர்கள் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு மேற்படி உள்ளக விசாரணை நடைபெற்றதாக அறியமுடிகிறது. விசாரணை அதிகாரியின் முடிவு அறிக்கை இவ்வழக்கில் நி.சா.ஆ. 67 ஆக உள்ளது. அதில் மனுதாரர் கடந்த 19.05.2021 முதல் எவ்வித தகவலுமின்றி

பணிக்கு வராமல் இருந்து வருகிறார் என்பது முக்கியமான குற்றச்சாட்டாக உள்ளது. அதுமட்டுமில்லாமல் கடந்த காலங்களில் 11.07.2013 மற்றும் 12.07.2013 ஆகிய தேதிகளில் எவ்வித தகவலோ, விடுப்பு விண்ணப்பமோ இல்லாமல் பணிக்கு வராமல் இருந்தது கூடுதல் குற்றச்சாட்டாக எழுப்பபப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் கடந்த 13.07.2013, 20.07.2013 மற்றும் 26.07.2013 ஆகிய தினங்களில் மனுதாரர் சங்க தலைவரிடம் முன் அனுமதி பெறாமல் வெளி வேலைக்கு சென்றதாகச் சொல்லி இருக்கையில் இல்லை என்கிற வகைக்கும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் கடந்த 2013ம் ஆண்டில், தான் சில நாட்கள் பணிக்கு வரவில்லை என்றும் சில நாட்கள் இருக்கையில் இல்லை என்றும் எழுப்பபப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றது மற்றும் உள் நோக்கம் உடையது என்று வாதிட்டார். பத்து ஆண்டுகள் காலதாமதமாக மேற்சொன்ன தேதிகளில் இருக்கையில் இல்லை என்றும் பணிக்கு வரவில்லை என்றும் சொல்லப்படும் சங்கதிகள் தொ.சா.ஆ. 105 முந்தைய பணி நீக்க உத்தரவிலேயே சொல்லப்படவில்லை என்பது மனுதாரர் தரப்பு வாதத்தின்

முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. மற்றபடி கடந்த 19.05.2021 தேதி முதல் மனுதாரர் பணிக்கு ஆஜராகவில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளையும் மனுதாரர் வன்மையாக மறுத்துள்ளார். தொ.சா.ஆ. 93ன்படி தான் நிர்வாகத்திடம் முறையாக விடுப்பு கேட்டு விண்ணப்பித்தும் நிர்வாகம் தனது விடுப்பை மறுத்து உத்தரவிடாத நிலையில் மேற்படி ஆவணம் விசாரணை அதிகாரியால் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது மனுதாரர் தரப்பு வாதமாக அமைகிறது. தொ.சா.ஆ. 93 சிறு விடுப்பு விண்ணப்பமானது கடந்த 18.05.2021ல் மனுதாரரால் நிர்வாகத்திற்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதில் 19.05.2021 முதல் 21.05.2021 வரை மனுதாரர் நிர்வாகத்திடம் விடுப்பு கோரியதாகச் சொல்லப்படுகிறது. மேலும் கொரோனா-II கால கட்டங்களில் தனது சிரமங்களை விளக்கி மனுதாரர் நிர்வாகத்திற்கு தொ.சா.ஆ. 94 மூலம் பதிவு தபால் கடிதம் அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கொரோனா-II காலகட்டத்தில் முறையான பேருந்து போக்குவரத்து வசதி இல்லை என்றும் தான் குடியிருக்கும் பகுதி கொரோனா தடை செய்யப்பட்ட பகுதியாக அடைக்கப்பட்டிருந்ததால் தான்

பணிக்கு வர இயலவில்லை என்று 25.07.2021ல் மனுதாரர் மேற்படி கடிதத்தை எழுதியதாக அறிய முடிகிறது. மேலும் 23.06.2021ல் தான் நிர்வாகத்தால் பழிவாங்கப்படுவதாகவும் கொரோனா காலகட்டங்களில் தனது சக ஊழியர் நாகம்மாள் கொரோனாவால் கடந்த 11.06.2021ல் இறந்துவிட்டதாகவும் மற்றொரு பணியாளரும் கொரோனா சிகிச்சையில் இருந்து வந்ததாகவும் ஆகையால் அலுவலகம் மூடப்பட்டிருந்ததாலும் தான் அலுவலகத்திற்கு வந்து வருகைப் பதிவேட்டில் கையொப்பம் செய்ய முடிவில்லை என்று தனது சூழ்நிலையைப் பதிவு தபால் மூலம் அனுப்பியுள்ளார். இவ்வழக்கில் அது முக்கிய ஆவணமாக அமைந்துள்ளது. மேலும் கடந்த 03.07.2021ல் தனக்கு நிர்வாகம் பணி மறுத்து வருவதைக் குறிப்பிட்டு மனுதாரர் தொ.சா.ஆ. 96 கடிதம் ஒன்றை எழுதியதாகவும் சொல்லப்படுகிறது. எனவே மனுதாரர் தரப்பில் தான் எந்தவித தகவலோ அனுமதியோ இல்லாமல் அலுவலகத்திற்கு வேலைக்கு வரவில்லை என்று சொல்லப்படும் சங்கதி முற்றிலும் பொய்யானது என்கிற வாதம் முன்வைக்கப்படுகிறது. நி.சா.ஆ. 67 விசாரணை அதிகாரியின் முடிவு

அறிக்கையின்படி மேற்சொன்ன ஆவணங்கள் எதுவும் கருத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக மனுதாரர் மீது பொய்யான பாலியல் புகார் தரப்பட்டு சங்கத்தினர் தொடர்ச்சியாக பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கதிகளை வேண்டுமென்றே நிர்வாகம் முன்னிலைப்படுத்தி தன்னை அசிங்கப்படுத்த முற்பட்டதாக மனுதாரர் மற்றொரு வாதம் முன்வைத்துள்ளார். மேற்சொன்ன வழக்கு சங்கதிகளில் பிழை உள்ளதாக போலீசாரால் முடிக்கப்பட்டதாக மனுதாரர் நிலைப்பாடு எடுத்துள்ளார். எனினும் மேற்சொன்ன ஆவணத்திற்கும் இவவழக்கின் ஆவணத்திற்கும் எந்த விதமான நேரடி தொடர்பும் இல்லை என்றாலும் கூட நிர்வாகம் மேற்சொன்ன ஆவணங்களை விசாரணை அதிகாரி முன்னிலைப்படுத்தியதன் நோக்கம் என்ன என்பதற்கு நிர்வாகத் தரப்பில் பதில் எதுவும் முன் வைக்கப்படவில்லை. எனவே மனுதாரரைப் பழிவாங்கும் நோக்கத்துடன் நிர்வாகம் அவற்றை செய்துள்ளதா என்கிற வகைக்கும் நி.சா.ஆ. 67 விசாரணை அறிக்கையில் சங்கதிகள் இல்லை.

14. இவ்வழக்கின் குற்றச்சாட்டுகள் தெளிவற்றவை என்பது மனுதாரர் தரப்பின்

மற்றொரு வாதமாகும். குற்றச்சாட்டுகளின் ஒட்டுமொத்த தொகுப்பே மனுதாரர் ஒழுங்காக பணிக்கு வரவில்லை என்பதாகும். இந்நிலையில் தனது கடமை மற்றும் பொறுப்புகளிடமிருந்து தவறி செயல்பட்டதுடன் சங்க சட்டம் மற்றும் துணை விதிகளுக்கு எதிராகப் பணியாற்றி இருப்பது இரண்டாவது குற்றச்சாட்டாக உள்ளது. எந்தெந்த பிரிவுகளின் கீழ் மனுதாரர் எவ்விதமான நடைமுறைகளின் விதிகளை மீறி விட்டார் என்பதற்கான சங்கதிகளும் குற்றச்சாட்டில் தெளிவாக இல்லை. உள்ளக விசாரணை அதிகாரியும் உரிய சங்க விதிகளையோ சங்க துணை விதிகளையோ தனது விசாரணை அறிக்கையில் மேற்கோள் காட்டவில்லை என்பதும் முக்கியமானதாகிறது. எனவே இவ்வழக்கில் மனுதாரர் பணி மூப்பு தொடர்பான வழக்குகள் போட்டதனால் நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்டுள்ளாரா? என்ற சங்கதிகளையும் விசாரணை அதிகாரி விசாரிக்க முயற்சிக்கவில்லை. மேலும் நிர்வாகம் மனுதாரரைப் பணிநீக்கம் செய்துவிட்டு பின்னர் இணைப்பதிவாளர் அலுவலரின் உத்தரவின் அடிப்படையில் மறு விசாரணை நடத்தி அது நிரந்தர பணிநீக்க முடிவிற்கு வந்திருப்பது பழிவாங்குதல் நடவடிக்கையின் அம்சமோ

என்பதனையும் விசாரணை அதிகாரி ஆய்ந்தறிந்ததாகத் தெரியவில்லை. மிகமுக்கியமாக எந்தெந்த பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை. மனுதாரர் தரப்பில் விடுப்பு விண்ணப்பம் போன்ற முக்கிய ஆவணங்களை கவனம் கொள்ளாமல் மனுதாரர் பணிக்கு வரவில்லை என்று முடிவு செய்து குற்றச்சாட்டுகள் நிரூபணமானதாகச் சொல்லியிருப்பது நெறி பிறழ்ந்ததாகவே இந்நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது. மனுதாரருக்கும் அதே அலுவலகத்தில் பணிபுரியும் அவரது சக ஊழியரான திருமதி.மனோன்மணி என்பவருக்கும் பணி மூப்பு தொடர்பான பிரச்சனை நெடுங்காலமாக இருந்து வருவதாக தெரியவருகிறது. மேற்சொன்ன பணிமூப்பு குறித்த பிரச்சனையும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. No.17380/2012 வழக்கு நிலுவையில் இருப்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். இச்சூழலில் மேற்சொன்ன திருமதி. மனோனன்மணியின் ஒரே சாட்சியத்தை மட்டுமே வைத்து நிர்வாகத் தரப்பில் 49 ஆவணங்களைக் குறியீடு செய்து மனுதாரர் மீதான குற்றச்சாட்டு

நிரூபணமாகியுள்ளது என்று விசாரணை அதிகாரி எவ்வாறு முடிவிற்குவந்தார் என்பது புரியாத புதிராக உள்ளது. மேலும் கடந்த 06.05.2021 அன்று மனுதாரர் உர விற்பனையாராக பணியமர்த்தப்பட்டுள்ளார். மனுதாரர் தனது பதவி உயர்விற்கு சட்ட ரீதியாக போராடிக் கொண்டு வரும் சூழலில் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள விற்பனையாளர் பணி ஏன் நிர்வாகத்தால் வழங்கப்பட்டது என்பதற்கும் விசாரணை அறிக்கையில் பதில் ஏதும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மனுதாரர் தரப்பு ஆவணங்களை வழக்கிற்கு சம்பந்தப்பட்ட ஆவணம், சம்பந்தமற்ற ஆவணம் என்று முன் முடிவு செய்து முற்றிலுமாக நிராகரித்திருப்பது விசாரணை அதிகாரியின் ஒரு சார்பு நிலையையே காட்டுவதாக அமைகிறது. எனவே இவ்வழக்கில் இயற்கை நீதிக்கு முற்றிலும் விரோதமாக உரிய நடைமுறைகள் எதுவும் முறையாக பின்பற்றப்படாமலும், முறையான பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்படாமலும் அவசர கதியில் விசாரணை நடைபெற்றதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே உள்ளக விசாரணை சரியாகவோ, முறையாகவோ நடத்தப்படவில்லை என்றும் விசாரணை

அதிகாரியின் விசாரணை அறிக்கை ஒரு சார்புடையது மற்றும் நெறி பிறழ்ந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. **முடிவில்**

அ) உள்ளக விசாரணை சரியாகவும் முறையாகவும் நடைபெறவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ஆ) விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கை ஒரு சார்புடையது மற்றும் நெறி பிறழ்ந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

தொழிற் தாவா சட்டப் பிரிவு 11-A ன் கீழான மேல் நடவடிக்கைக்காக அழைக்க வாய்தா 21.01.2025

*(இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு,*

*என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024ம் வருடம் டிசம்பர் மாதம் 12-ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது)*

Digitally signed by
ARUNACHALAM KUTTALINGAM
Date: 2024.12.16 12:02:12 +05'30'

தலைமை தாங்கும் அதிகாரி,

கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்

**மனுதாரர் தரப்பு சாட்சி :- இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :- இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

| **ஆவண எண்** | **விவரம்** | **தேதி** | **தன்மை** |
|---|---|---|---|
| தொ.சா.ஆ. 1 | பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பளையகப் பண்டக விற்பனையாளர் நியமித்தல் தொடர்பான ஆணையின் நகல் | 03.05.1991 | நகல் |
| தொ.சா.ஆ. 2 | மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செயல்முறை ஆணை | 22.12.2000 | நகல் |
| தொ.சா.ஆ. 3 | கே. 141 மலையாண்டிப்பட்டிணம் பி.ஏ.சி.பி விற்பனையாளர் பணி மாறுதல் தொர்பான செயல்முறை ஆணை | 18.12.2000 | நகல் |
| தொ.சா.ஆ 4 | கே. 141 மலையாண்டிப்பட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி - | 10.04.2002 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனையாளர் பதவி உயர்வு, அனுமதி கோருதல் தொடர்பான கடிதம் | | |
| தொ.சா.ஆ 5 | கே. 141 மலையாண்டிப்பட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி விற்பனையாளர் உதவியாளராக பதவி உயர்வு அனுமதி கோருதல் முன்மொழிவு கடிதம் | 12.07.2002 | நகல் |
| தொ.சா.ஆ 6 | மனுதாரர் பதவி உயர்வு வழங்கக் கோரி எழுதிய கடிதம் | 17.04.2007 | நகல் |
| தொ.சா.ஆ 7 | கே. 141 மலையாண்டிப்பட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தனி அலுவலரின் செயல்முறை ஆணை - வருடாந்திர ஊதிய உயர்வு அனுமதித்தல் தொடர்பாக | 30.07.2007 | நகல் |
| தொ.சா.ஆ 8 | கே. 141 மலையாண்டிப்பட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் வேற்றுப்பணி மாற்று ஆணை ந.க. எண். 11997/2010/வே2 | 03.02.2010 | நகல் |
| தொ.சா.ஆ 9 | கூட்டுறவு சங்கத்தில் உள்ள உபரிப் பணியாளர்களை வேறு சங்கத்தில் நிரந்தரமாக ஈர்த்துக்கொள்ளுதல் தொடர்பான ஆணை ந.க. 6305/2008/வே.2 | 14.05.2010 | நகல் |
| தொ.சா.ஆ.10 | கே. 141 மலையாண்டிபட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் தனி | 14.05.2010 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலர் இணைப் பதிவாளர் அவர்களுக்கு எழுதிய கடிதம் | | |
| தொ.சா.ஆ.11 | இராவத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பணி புரிய மறுபரவல் முறையில் பணியிட மாற்றம் செய்து பிறப்பி ஆணை | 01.02.2011 | நகல் |
| தொ.சா.ஆ.12 | **CC**. **No**. 5/2012 வழக்கில் பொள்ளாச்சி சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | 31.10.2012 | நகல் |
| தொ.சா.ஆ.13 | ஊதிய உயர்வை 01.04.2008 முதல் ரத்து செய்து ஆணை வழங்குவது குறித்து தனி அலுவலரின் செயல்முறை ஆணை | 07.10.2011 | நகல் |
| தொ.சா.ஆ.14 | மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் **WP**. **No**. 17380/2012ல் பிறப்பித்த உத்தரவு | 06.07.2012 | நகல் |
| தொ.சா.ஆ.15 | மனுதாரரை பணியிட மாற்றம் செய்துதரக் கோருதல் சம்பந்தமாக எதிர்மனுதாரர் நிர்வாக சங்க தலைவர் அனுப்பிய கடிதம் | 11.07.2013 | நகல் |
| தொ.சா.ஆ.16 | மனுதாரருக்கு முறைபற்றவகையில் ஊதிய உயர்வுகள் வழங்கப் பட்டது, தணிக்கையில் மறுக்கப்பட்டது. திருப்பி வசூலிப்பது தொடர்பாக, எதிர்மனுதாரர் நிர்வாக சங்க தலைவர் வழங்கிய குறிப்பாணை | 16.12.2013 | நகல் |
| தொ.சா.ஆ.17 | மனுதாரர் விளக்கம் சமர்ப்பித்து கூட்டுறவு பதிவாளர் சென்னை அவர்களுக்கு அனுப்பிய | 22.12.2013 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | கடிதம் | | |
| தொ.சா.ஆ.18 | ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் தற்காலிக பணிநீக்கம் தொடர்பான தலைவரின் செயல்முறை ஆணை | 23.12.2013 | நகல் |
| தொ.சா.ஆ.19 | மனுதாரர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு எழுதிய கடிதம் | 08.01.2014 | நகல் |
| தொ.சா.ஆ.20 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தனி அலுவலரின் குறிப்பாணை | 19.03.2014 | நகல் |
| தொ.சா.ஆ.21 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளித்தது தொடர்பான கடிதம் | 28.03.2014 | நகல் |
| தொ.சா.ஆ.22 | எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்ட தபாலை எதிர்மனு தாரர் நிர்வாகம் ஏற்க மறுத்ததால் திருப்பப்பட்ட அஞ்சலக உறை | 28.03.2014 | நகல் |
| தொ.சா.ஆ.23 | எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரின் தற்காலிக பணிநீக்கம் தொடர்பாக வழங்கிய கூடுதல் குற்றச்சாட்டு குறிப்பாணை | 08.05.2014 | நகல் |
| தொ.சா.ஆ.24 | தற்காலிக பணிநீக்கத்தில் எதிர்மனுதாரர் இருந்து மீண்டும் பணி வழங்க கோரி நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 23.08.2014 | நகல் |
| தொ.சா.ஆ.25 | எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரின் தற்காலிக பணிநீக்கம், முறிவு கட்டுதல், மீண்டும் பணியமர்த்தம் செய்தல் தொடர்பான செயல்முறை ஆணை | 28.08.2014 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.26 | கோயமுத்தூர் மின் திட்ட பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்திற்கு மனுதாரர் பணியிடை மாற்றம் குறித்து செயல்முறை | 29.09.2014 | நகல் |
| தொ.சா.ஆ.27 | மின் திட்ட பணியாளர்கள் சங்கம், இணை பதிவாளர் கோவை அவர்களுக்கு மனுதாரர் பணி அமர்த்தப்பட்டது தொடர்பான கடிதம் | 31.10.2014 | நகல் |
| தொ.சா.ஆ.28 | பணியில் சேர்வது குறித்து மின் திட்ட பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 24.10.2014 | நகல் |
| தொ.சா.ஆ.29 | மின் திட்ட பணியாளர்கள் சங்கம் இணை பதிவாளர் கோவை அவர்களுக்கு மனுதாரரை பணி அமர்த்தப்பட்ட ஆணை சமர்ப்பித்தல் தொடர்பாக அனுப்பிய கடிதம் | 31.10.2014 | நகல் |
| தொ.சா.ஆ.30 | மனுதாரரை பணியிலிருந்து விடுவித்தது தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 23.10.2014 | நகல் |
| தொ.சா.ஆ.31 | கோயமுத்தூர் மின் திட்ட பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்திற்கு மனுதாரர் மருத்துவ விடுப்பு தொடர்பாக அனுப்பிய கடிதம் | 25.02.2015 | நகல் |
| தொ.சா.ஆ.32 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவர் அவர்களுக்கு 01.04.2015 முதல் 30.04.2015 வரை விடுப்பை நீட்டிக்க கோரிய கடிதம் | 01.04.2015 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.33 | எதிர்மனுதாரர் சங்கத் தலைவருக்கு மனுதாரரது வருகையை பணிப் பதிவேட்டில் பதிவு செய்ய தெரிவிக்கப்பட்ட கடிதம் | 29.04.2015 | நகல் |
| தொ.சா.ஆ.34 | மனுதாரரது வழக்கறிஞர் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய அறிவிப்பு | 10.09.2015 | நகல் |
| தொ.சா.ஆ.35 | மனுதாரர் அனுப்பிய அஞ்சலக உறை | 14.09.2015 | நகல் |
| தொ.சா.ஆ.36 | மனுதாரரை பணியிலிருந்து விடுவிப்பு செய்வது சம்பந்தமாக மின் திட்ட பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சங்கத்தின் தலைவர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | 31.12.2015 | நகல் |
| தொ.சா.ஆ.37 | மனுதாரர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு எழுதிய கடிதம் | 10.02.2016 | நகல் |
| தொ.சா.ஆ.38 | மனுதாரரின் சிறு விடுப்பு கடிதம் | 03.03.2016 | நகல் |
| தொ.சா.ஆ.39 | மனுதாரர் தலைவர் அவர்களுக்கு எழுதிய கடிதம் | 13.03.2016 | நகல் |
| தொ.சா.ஆ.40 | 21.03.2016 முதல் 24.03.2016 வரை மருத்துவ விடுப்பு வேண்டி மனுதாரர் அனுப்பிய கடிதம் | 21.03.2016 | நகல் |
| தொ.சா.ஆ.41 | மனுதாரர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பி கடிதம் | 14.03.2010 | நகல் |
| தொ.சா.ஆ.42 | 07.03.2016 லிருந்து தொடர்ந்து விடுப்பு விண்ணப்பத்தினை நிலுவையில் உள்ள | 27.04.2016 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | சம்பளமில்லா விடுப்பாக கருதப்படும் என எதிர்மனுதாரர் நிர்வாசத்தின் தலைவர் மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | | |
| தொ.சா.ஆ.43 | மலையாண்டிப் பட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ந.க.எண். 1724/2016/வே1 கடிதம் | 15.07.2016 | நகல் |
| தொ.சா.ஆ.44 | 21.05.2016 முதல் 31.05.2016 முடிய விடுப்பு கேட்டு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 23.05.2016 | நகல் |
| தொ.சா.ஆ.45 | 01.06.2016 முதல் 10.06.2016 முடிய விடுப்பு வேண்டி மனுதாரர் அனுப்பிய கடிதம் | 01.06.2016 | நகல் |
| தொ.சா.ஆ.46 | VGM Gastro Centre வழங்கிய ரசீது | 17.03.2017 | நகல் |
| தொ.சா.ஆ.47 | சங்கத்தின் தலைவர் மற்றும் பணியாளர்கள் குறித்து துணைப் பதிவாளருக்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 03.04.2017 | நகல் |
| தொ.சா.ஆ.48 | மனுதாரர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | 03.04.2017 | நகல் |
| தொ.சா.ஆ.49 | காப்பீட்டு அட்டையை பெற்றுக்கொள்ள எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் மனுதாரருக்கு வழங்கிய கடிதம் | 19.04.2017 | நகல் |
| தொ.சா.ஆ.50 | பணி வழங்கக் கோரியும், பணி மறுக்கப்பட்ட நாட்களுக்கு பிழைப்பூதியம் கோரியும் மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 03.05.2017 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.51 | மேற்படி கடிதத்திற்கு எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்கள் வழங்கிய பதிலறிவிப்பு கடிதம் | 17.05.2017 | நகல் |
| தொ.சா.ஆ.52 | பிழைப்பூதிய சட்டப் பிரிவு 3Aன் கீழ் மனுதாரர் தாக்கல் செய்த மனு | 14.06.2017 | நகல் |
| தொ.சா.ஆ.53 | துணைப்பதிவாளருக்கு மனுதாரரின் புகார் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்ககோரி ந.க.எண். 2627/2018/வே2 கடிதம் | 07.06.2018 | நகல் |
| தொ.சா.ஆ.54 | மனுதாரர் பணியில் சேர்ந்தது தொடர்பான பணிசேர் அறிக்கையினை உடன் சமர்ப்பிக்குமாறு கோரி இணைபதிவாளர் K141 செயலருக்கு வழங்கிய கடிதம் | 11.06.2018 | நகல் |
| தொ.சா.ஆ.55 | இணைபதிவாளரின் 11.6.2018 தேதியிட்ட உத்தரவின்படி மீண்டும் பணி வழங்கக்கோரி மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் செயலருக்கு அனுப்பிய கடிதம் | 11.06.2018 | நகல் |
| தொ.சா.ஆ.56 | தனக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் பணி உயர் பாதுகாப்பு கோரி இணைபதிவாளருக்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 18.06.2018 | நகல் |
| தொ.சா.ஆ.57 | New pay Settlementன் கீழ் புதிய சம்பளம் வழங்குமாறு இணை பதிவாளருக்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 12.07.2018 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.58 | ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின்படி ஊதியம் வழங்கல் கோரி மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 08.09.2018 | நகல் |
| தொ.சா.ஆ.59 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பி கடிதம் | 18.09.2018 | நகல் |
| தொ.சா.ஆ.60 | வேலைக்கு வந்தும் பணி ஒதுக்கப்படாமல் இருந்தது தொடர்பாக வழங்கக்கோரியும் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் செயலருக்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 06.07.2018 | நகல் |
| தொ.சா.ஆ.61 | மனுதாரர் இணைப்பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | 27.08.2018 | நகல் |
| தொ.சா.ஆ.62 | மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிர்வாக தலைவர் சம்பளம் வழங்க கோரி பதிவுத்தபால் தொடர்பாக அனுப்பிய கடிதம் | 28.09.2018 | நகல் |
| தொ.சா.ஆ.63 | W.P.No.11966/2017 ல் மாண்புமிக மெட்ராஸ் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | 31.07.2023 | நகல் |
| தொ.சா.ஆ.64 | W.P.No.17380/2012ல் மாண்புமிக மெட்ராஸ் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | 06.07.2012 | நகல் |
| தொ.சா.ஆ.65 | விடுப்பு வேண்டி எழுத்தர் செயலாளர் பொறுப்பு (அ) தலைவர் அவர்களுக்கு | 08.04.2019 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | மனுதாரர் அனுப்பிய கடிதம் | | |
| தொ.சா.ஆ.66 | மனுதாரர் எதிர்மனுதார் நிர்வாக தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 14.04.2019 | நகல் |
| தொ.சா.ஆ.67 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு மருத்துவ விடுப்பு கோரி அனுப்பிய கடிதம் | 20.04.2019 | நகல் |
| தொ.சா.ஆ.68 | எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய குறிப்பாணை | 22.04.2019 | நகல் |
| தொ.சா.ஆ.69 | கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களுக்கு ஊதியத்தை கணக்கிட்டு வழங்க கோரி மனுதாரர் அனுப்பிய கடிதம் | 09.04.2019 | நகல் |
| தொ.சா.ஆ.70 | மனுதாரரின் ஊதிய உயர்வு ஒப்பந்த்தின்படி ஊதியத்தை கணக்கிட்டு வழங்கக் கோரியது தொடர்பான கடிதம் | 23.04.2019 | நகல் |
| தொ.சா.ஆ.71 | குறிப்பாணைக்கு மனுதாரர் சமர்ப்பித்த விளக்கக்கடிதம் | 29.04.2019 | நகல் |
| தொ.சா.ஆ.72 | எதிர்மனுதாரர் சங்கம் மற்றும் தலைவர் மீது குற்றச்சாட்டுகள் பிரிவு- 81 ன் கீழான மனு | 15.09.2020 | நகல் |
| தொ.சா.ஆ.73 | தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 81ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டது - தண்டத்தீர்வை முன்னோடி அறிவிப்பு வழங்குதல் தொடர்பான நகல் | 19.06.2020 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.74 | மனுதாரரை கோவை மாவட்ட சத்துணவு பணியார்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பணியாற்றிட அனுமதி அளித்து இணைபதிவாளர் வழங்கிய ஆணை | 07.06.2019 | நகல் |
| தொ.சா.ஆ.75 | கோயமுத்தூர் மாவட்ட சத்துணவு பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு பணியாற்ற மனுதாரருக்கு அனுமதி அளித்துள்ளது சம்மந்தமாக விளக்கங்களை தெரிவித்து இணைப்பதிவாளருக்கு அனுப்பிய கடிதம் | 21.06.2019 | நகல் |
| தொ.சா.ஆ.76 | மறுபரவல் பணிமுறை அனுமதி கோரி மனுதாரர் அனுப்பிய கடிதம் | 02.07.2019 | நகல் |
| தொ.சா.ஆ.77 | உயிர் பாதுகாப்பு, பணி பாதுகாப்பு கோரி மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவரின் மறுபரவல் பணிமுறை தொடர்பாக அனுப்பிய கடிதம் | 02.07.2019 | நகல் |
| தொ.சா.ஆ.78 | விடுப்பு சம்பளம் அனுமதிக்காதது தொடர்பாக மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 03.07.2019 | நகல் |
| தொ.சா.ஆ.79 | பணி வழங்கக்கோரி மீண்டும் மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 23.08.2019 | நகல் |
| தொ.சா.ஆ.80 | குடும்ப சூழ்நிலை கருதி SB. Account 1796-4-9-19ல் உள்ள பணத்தை | 18.09.2019 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்துக்கொண்டது அதை திரும்ப வழங்க கோரி மனுதாரர் மனோன்மணிக்கு அனுப்பிய கடிதம் | | |
| தொ.சா.ஆ.81 | மனுதாரரின் சேமிப்பு கணக்கு SB கணக்கின் நிலுவை தொகையை கோருவது தொடர்பாக அனுப்பிய கடிதம் | 18.09.2019 | நகல் |
| தொ.சா.ஆ.82 | எதிர்மனுதாரர் நிர்வாக தலைவர், மனுதாரரை சங்கப் பணியிலிருந்து விடுவிப்பது சம்பந்தமாக அனுப்பிய கடிதம் | 27.09.2019 | நகல் |
| தொ.சா.ஆ.83 | கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளரின் செயல்முறை ந.க.எண்.5725/2020/வே2 ஆணை | 30.11.2020 | நகல் |
| தொ.சா.ஆ.84 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு உடனடியாக பணி வழங்க கோரி அனுப்பிய கடிதம் | 19.01.2021 | நகல் |
| தொ.சா.ஆ.85 | இணைபதிவாளரின் செயல்முறை ஆணை ந.க. 5725/2020 ன் கீழ் பணி அமர்த்தம் செய்யப்பட்டது தொடர்பான உத்தரவு | 27.01.2021 | நகல் |
| தொ.சா.ஆ.86 | மனுதாரர் துணை பதிவாளருக்கு அனுப்பிய கருணை மனு | 01.02.2021 | நகல் |
| தொ.சா.ஆ.87 | எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு சம்பளம் நிர்ணயம் செய்வது தொடர்பாக மனுதாரர் எழுதிய கடிதம் | 03.02.2021 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.88 | மனுதாரர் PACCSல் பணி அமர்த்தம் செய்து ஆணையிடுதல் தொடர்பாக இணைபதிவாளர் அவர்களுக்கு எழுதிய கடிதம் | 08.03.2021 | நகல் |
| தொ.சா.ஆ.89 | மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு | 18.04.2021 | நகல் |
| தொ.சா.ஆ.90 | இணைபதிவாளரின் செயல்முறை ஆணை ந.க. 5725/2020வே2(1) | 20.04.2021 | நகல் |
| தொ.சா.ஆ.91 | மனுதாரரை பணியில் சேருவது தொடர்பாக இணைப்பதிவாளரின் ஆணை | 30.04.2021 | நகல் |
| தொ.சா.ஆ.92 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் கடமைகள் மற்றும் பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்பட்ட ஆணை | 06.05.2021 | நகல் |
| தொ.சா.ஆ.93 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களுக்கு விடுப்பு கோரி அனுப்பிய கடிதம் | 18.05.2021 | நகல் |
| தொ.சா.ஆ.94 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களுக்கு 19.05.2021 முதல் 21.05.2021 வரை விடுப்பு கோரி அனுப்பிய கடிதம் | 27.05.2021 | நகல் |
| தொ.சா.ஆ.95 | மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு | 23.06.2021 | நகல் |
| தொ.சா.ஆ.96 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | 03.07.2021 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.97 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர், மனுதாரரிடம் விளக்கம் கோருதல் தொடர்பாக அனுப்பிய கடிதம் | 12.07.2021 | நகல் |
| தொ.சா.ஆ.98 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் மனுதாரரிடம் பொறுப்பினை ஏற்று பணிசெய்ய கோருதல் தொடர்பாக எழுதிய கடிதம் | 26.05.2021 | நகல் |
| தொ.சா.ஆ.99 | மனுதாரர் துணைபதிவாளர் அவர்களுக்கு பணி மாறுதல் எழுதிய கடிதம் | 30.07.2021 | நகல் |
| தொ.சா.ஆ.100 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களுக்கு பணியிடம் வழங்காமை தொடர்பாக அனுப்பிய கடிதம் | 03.08.2021 | நகல் |
| தொ.சா.ஆ.101 | மனுதாரர் தலைவர் அவர்களுக்கு ஊதியம் கோரியது தொடர்பாக அனுப்பிய கடிதம் | 03.08.2021 | நகல் |
| தொ.சா.ஆ.102 | மறுபரவல் முறையில் மனுதாரரை மதரப்பகவுண்டன்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிறப்பித்த உத்தரவு | 04.08.2021 | நகல் |
| தொ.சா.ஆ.103 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களின் குற்றச்சாட்டு குறிப்பாணை | 16.08.2021 | நகல் |
| தொ.சா.ஆ.104 | மனுதாரர், எதிர்மனுதாரர் நிர்வாக தலைவரிடம் குறிப்பாணைக்கு முழுமையான விளக்கத்தினை சமர்பிக்க ஆவணங்கள் | 19.08.2021 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்க கோரி அனுப்பிய கடிதம் | | |
| தொ.சா.ஆ.105 | எதிர்மனுதாரர் நிமின் கல்லவர் அவர்களின் நிரந்தர பணிநீக்கம் செய்த செயல்முறை ஆணை | 03.09.2021 | நகல் |
| தொ.சா.ஆ.106 | மனுதாரர் தாக்கல் செய்த சீராய்வு மனுவின் நகல் ந.க.எண். 8472/2021/வே-2 | - | நகல் |
| தொ.சா.ஆ.107 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தரப்பில் தாக்கல் செய்யப்படும் வாதுரை | - | நகல் |
| தொ.சா.ஆ.108 | மனுதாரர் தாக்கல் செய்த மறுப்புரை | - | நகல் |
| தொ.சா.ஆ.109 | சீராய்வு மனு ந.க.எண். 8472/2021/வே-2 ன் தீர்ப்புரை | 26.08.2022 | நகல் |
| தொ.சா.ஆ.110 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் அவர்களுக்கு மீண்டும் பணித் தொடர்ச்சியுடனும், பின்சம்பளத்துடனும் இதரபிற சலுகைகளுடனும் பணிவழங்க கோருதல் தொடர்பாக மனுதாரர் அனுப்பிய கடிதம் | 13.09.2022 | நகல் |
| தொ.சா.ஆ.111 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு பணிசேர் அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக எழுதிய கடிதம் | 14.09.2022 | நகல் |
| தொ.சா.ஆ.112 | எதிர்மனுதாரர் நிர்வாக தலைவர் உரிய அனுமதி பெற்ற ஆணையை வழங்க கோரி அனுப்பிய கடிதம் | 19.09.2022 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.113 | எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு இணைபதிவாளர் பிறப்பித்த உத்தரவு அடிப்படையில் பணி வழங்க கோரி மனுதாரர் அனுப்பிய கடிதம் | 20.09.2022 | நகல் |
| தொ.சா.ஆ.114 | மனுதாரர் பணியில் சேர அனுமதித்தல் தொடர்பான ஆணை | 22.09.2022 | நகல் |
| தொ.சா.ஆ.115 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு பணிசேர் அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக எழுதிய கடிதம் | 28.09.2022 | நகல் |
| தொ.சா.ஆ.116 | எதிர்மனுதாரர் நிர்வாக தலைவர் மனுதாரருக்கு உள்ளக விசாரணை அதிகாரி குறித்து அனுப்பி கடிதம் | 03.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.117 | விசாரணை அதிகாரி மனுதாரருக்கு அனுப்பிய ஆணை | 06.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.118 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு பணிசேர் அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக அனுப்பிய கடிதம் | 06.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.119 | கூட்டுறவு சங்கங்க வழி இணைப்பதிவாளர் அவர்கள் சீராய்வு மனு எண் 8472/2021 ல் வழங்கிய தீர்ப்பை செயல்படுத்துதல் தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாகம் அனுப்பிய கடிதம் | 13.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.120 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாக | 14.10.2022 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | தலைவருக்கு 03.10.2022 தேதியிட்டு 07.10.2012 தேதியில் கிடைக்கப்பெற்ற கடிதத்திற்கு விளக்கம் சமர்ப்பித்தல் தொடர்பாக அனுப்பிய கடிதம் | | |
| தொ.சா.ஆ.121 | எதிர்மனுதாரர் நிர்வாக சங்க தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை | 17.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.122 | மனுதாரர் பணிசேர் அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு எழுதிய கடிதம் | 17.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.123 | மனுதாரர் K-141 மலையாண்டிப்பட்டணம் PACCS மீதுள்ள குற்றச் சாட்டின் மீதான உள் விசாரணை தொடர்பாக உள் விசாரணை அலுவலர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | 21.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.124 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் உள் விசாரணை தொடர்பாக விசாரணை அதிகாரிக்கு எழுதிய கடிதம் | 25.10.2022 | நகல் |
| தொ.சா.ஆ.125 | மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் உள் விசாரணை தொடர்பாக விசாரணை அதிகாரிக்கு எழுதிய கடிதம் | 07.11.2022 | நகல் |
| தொ.சா.ஆ.126 | மனுதாரர் விசாரணை அதிகாரி நிர்வாகத்தரப்பு பிரதிநிதியை மாற்றக் கோருதல் மற்றும் ஆவணங்கள் கோருதல் தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு எழுதிய கடிதம் | 13.11.2022 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.127 | மனுதாரர் விசாரணையை ஒத்தி வைக்கக் கோருதல் தொடர்பாக விசாரணை அதிகாரிக்கு அனுப்பிய கடிதம் | 21.11.2022 | நகல் |
| தொ.சா.ஆ.128 | மனுதாரர் மருத்துவ விடுப்பு கோருதல் தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 21.11.2022 | நகல் |
| தொ.சா.ஆ.129 | மனுதாரர் குற்றச்சாட்டின் மீது நடைபெறும் உள்ளக விசாரணை தொடர்பாக விசாரணை அலுவலர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | 04.12.2022 | நகல் |
| தொ.சா.ஆ.130 | மனுதாரர் சீராய்வு மனு உத்தரவின் பேரில் எதிர்மனுதாரர் சங்கம். உள் விசாரணை தொடர்பாக உள்விசாரணை அலுவலருக்கு அனுப்பிய கடிதம் | 16.12.2022 | நகல் |
| தொ.சா.ஆ.131 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு தொடர்பாக அனுப்பிய ஆணை | 29.12.2022 | நகல் |
| தொ.சா.ஆ.132 | மனுதாரரது விளக்கத்தினை சமாப்பிக்க 15 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டி எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 05.01.2023 | நகல் |
| தொ.சா.ஆ.133 | எதிர்மனுதாரர் நிர்வாகதலைவர் விளக்கம் சமர்ப்பிக்க இறுதி வாய்ப்பு குறித்து மனுதாரருக்கு அனுப்பிய ஆணை | 09.01.2023 | நகல் |

| | | | |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.134 | விளக்கம் கோரி எதிர்மனுதாரர் நிர்வாக தலைவருக்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் | 17.01.2023 | நகல் |
| தொ.சா.ஆ.135 | மனுதாரர் விளக்கம் சமர்ப்பித்தல் தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவருக்கு அனுப்பிய கடிதம் | 23.01.2023 | நகல் |
| தொ.சா.ஆ.136 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் தலைவர் மனுதாரருக்கு நிரந்தர பணிநீக்கம் தொடர்பாக அனுப்பிய ஆணை | 01.02.2023 | நகல் |
| தொ.சா.ஆ.137 | ந.க. 144/2023 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை | - | நகல் |
| தொ.சா.ஆ.138 | சமரசமுறிவறிக்கை | 10.07.2023 | நகல் |
| தொ.சா.ஆ.139 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் ஆணை | 13.02.2023 | நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| Exhibits | Documents | Date | Remarks |
|---|---|---|---|
| நி.சா.ஆ. 1 | 13-07-2013, 20-07-2013, 26-07-2013-ம் தேதிய எதிர்மனுதாரர் சங்க வருகைப் பதிவேடு | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ. 2 | எதிர்மனுதாரர் சங்க வருகைப் பதிவேடு பக்கம் 45 முதல் 48 வரை (மே 2021, | - | ஒளிப்பட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் 2021) | | |
| நி.சா.ஆ. 3 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய குற்றச்சாட்டு குறிப்பாணை | 16.08.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ 4 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 19.08.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ 5 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய நிரந்தர பணி நீக்க உத்தரவு | 03.09.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ 6 | சீராய்வு மனு எண். 8472/2021/வே2 கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், கோவை அவர்கள் பிறப்பித்த தீர்வம் | 26.08.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ 7 | ஆட்சியர் அவர்களின் கடமையும் பொறுப்பும் நிர்ணயம் செய்யப்பட்ட தீர்மானம் | 09.02.2023 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ 8 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய கடமையும் பொறுப்பும் | 11.09.2018 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ 9 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய கடமையும் பொறுப்பும் | 06.05.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.10 | எதிர்மனுதாரர் சங்கத்தின் துணை விதிகள் | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.11 | எதிர்மனுதாரர் சங்க பணியாளர்களின் சிறப்பு துணை விதி | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.12 | கோயமுத்தூர் மண்டல கூட்டுறவு | 07.06.2019 | ஒளிப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சங்கங்களின் இணைப் பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. 2851/2019/வே2 | | நகல் |
| நி.சா.ஆ.13 | கோயமுத்தூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அவர்களின் 3 பக்க செயல்முறை ஆணை ந.க. 5725/2020/வே2(1) | 20.04.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.14 | கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அவர்களின் கடிதம். ந.க. 1040/2019/கவி (3) | 21.09.2020 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.15 | எதிர்மனுதாரர் சங்க நிர்வாக பிரதிநிதியின் எழுத்துமூலமான வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் பட்டியல் | 22.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.16 | மனுதாரருக்கு ஒரு நாள் சம்பளத்தை நிறுத்தி வைத்து தண்டனை வழங்கிய பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையினரின் குறிப்பாணை | 21.01.1993 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.17 | மனுதாரருக்கு மூன்று மாத கால ஊதிய உயர்வை ரத்து செய்தும், தற்காலிக பணி நீக்க காலம் சம்பளமில்லா விடுப்பாக அனுமதித்தும் தண்டனை வழங்கிய பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த | 30.06.1993 | ஒளிப்பட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை பண்டகசாலையினரின் ஒரு பக்க செயல் முறை ஆணை | | |
| நி.சா.ஆ.18 | மனுதாரருக்கு எதிர்மனுதாரர் பிறப்பித்த தற்காலிக பணி நீக்க உத்தரவு | 08.12.2005 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.19 | மனுதாரரின் பணிப் பதிவேடு | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.20 | மனுதாரருக்கு முதுநிலை எழுத்தர் பணி பொறுப்பு வழங்கிய எதிர்மனுதாரர் சங்க தீர்மானம் | 03.03.2006 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.21 | துணைப் பதிவாளர் எதிர்மனுதாரர் சங்கத்தினருக்கு எழுதிய மனுதாரரின் பணிப் பொறுப்பு குறித்த கடிதம் ஓ.மு.1425/2007/வே.சே.ச1 | 19.03.2007 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.22 | எதிர்மனுதாரர் சங்க தீர்மானம் | 17.04.2007 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.23 | துணைப் பதிவாளர் எதிர்மனுதாரர் சங்கத்தினருக்கு எழுதிய மனுதாரரின் பணி உயர்வு ரத்து ஊதியம் நிர்ணயம் குறித்த உத்தரவு | 07.09.2011 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.24 | எதிர்மனுதாரர் சங்கம் மனுதாரருக்கு ஊதிய உயர்வு ரத்து செய்து பிறப்பித்த செயல் முறை ஆணை | 07.10.2011 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.25 | சீராய்வு மனு எண் 9704/2011/வே.2-ன் | 16.02.2012 | ஒளிப்பட |

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவு | | நகல் |
| நி.சா.ஆ.26 | சென்னை உயர்நீதி மன்ற நீதிப் பேராணை எண். 17380/2012-ன் உத்தரவு | 21.02.2020 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.27 | சீராய்வு மனு எண் 1883/2020/ப2-ன் உத்தரவு | 08.04.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.28 | மனுதாரரின் வழக்குரைஞர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 29.05.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.29 | பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க 28 கலாசிகள் மனுதாரர் மீது அளித்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை | 16.12.2011 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.30 | எதிர்மனுதாரர் சங்க தனி அலுவலர் மனுதாரருக்கு வழங்கிய குற்றச்சாட்டு குறிப்பாணை | 09.01.2012 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.31 | எதிர்மனுதாரர் சங்க தனி அலுவலர் மனுதாரருக்கு ஆறு மாத ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து பிறப்பித்த தண்டனை செயல் முறை ஆணை | 12.03.2012 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.32 | எதிர்மனுதாரர் சங்க முகாம் பதிவேடு | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.33 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு வழங்கிய | 23.08.2014 | ஒளிப்பட |

| | | | |
|---|---|---|---|
| | கடிதம் | | நகல் |
| நி.சா.ஆ.34 | எதிர்மனுதாரர் சங்க ஊதியப் பதிவேடு | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.35 | மனுதாரர் மீது 05-04-2019, 08-04-2019-ம் தேதிகளிட்டு மூன்று எதிர்மனுதாரர் சங்க வாடிக்கையாளர்கள் கொடுத்த புகார்களினை அடிப்படையாகக் கொண்டு மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட குறிப்பாணை | 22.04.2019 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.36 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு விடுப்பு குறித்த ஊதிய நிலைப்பாட்டினை தெரிவித்து அனுப்பிய கடிதம் | 03.06.2019 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.37 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு விடுப்பு குறித்த ஊதிய நிலைப்பாட்டினை தெரிவித்து அனுப்பிய கடிதம் | 25.06.2019 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.38 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய கடமை மற்றும் பொறுப்புகள் குறித்த கடிதம் | 06.05.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.39 | மனுதாரரின் விடுப்பு விண்ணப்பம் | 12.05.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.40 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பொறுப்பேற்க கோரிய கடிதம் | 26.05.2021 | ஒளிப்பட நகல் |

| | | | |
|---|---|---|---|
| நி.சா.ஆ.41 | மனுதாரரின் கடிதம் | 27.05.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.42 | மனுதாரர் பதிவாளருக்கு முகவரியிட்டு எதிர்மனுதாரருக்கு நகலிட்ட கடிதம் | 21.06.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.43 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய ஊதிய வேறுபாட்டுத் தொகையை செலுத்த கோரிய கடிதம் | 02.07.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.44 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 12.07.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.45 | திருமதி மேரி கலா அவர்கள் பொள்ளாச்சி காவல் நிலையத்தில் அளித்த பாலியல் புகார் சம்மந்தமாக மாலை மலர் நாளிதழில் வெளிவந்த செய்தி | 08.10.2012 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.46 | திருப்பூர் மண்டல இணைப்பதிவாளர் கோயமுத்தூர் மண்டல இணைப்பதிவாளர் அவர்களுக்கு மனுதாரரின் ஒழுங்கீன செயல் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பிய கடிதம் | 12.05.2021 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.47 | எதிர்மனுதாரர் சங்க பணியாளர் சிறப்பு துணை விதிகள் | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.48 | மனுதாரர் சீராய்வு மனு எண். | - | ஒளிப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 8472/2021-ல் தாக்கல் செய்த சீராய்வு மனு | | நகல் |
| நி.சா.ஆ.49 | எதிர்மனுதாரர் சீராய்வு மனு எண். 8472/2021-ல் தாக்கல் செய்த எதிருரை | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.50 | மனுதாரர் சீராய்வு மனு எண். 8472/2021-ல் தாக்கல் செய்த மறுப்புரை | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.51 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 30.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.52 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 12.12.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.53 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு உள்ளக விசாரணை, உள்ளக விசாரணை அதிகாரி நியமனம் குறித்து அனுப்பிய கடிதம் | 03.10.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.54 | உள்ளக விசாரணை அதிகாரி அவர்களின் அழைப்பாணை மற்றும் பதிவுத் தபால், ஒப்புகை இரசீது | 06.10.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.55 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய கடிதம் | 20.10.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.56 | எதிர்மனுதாரர் விசாரணை அலுவலருக்கு வழங்கிய நிர்வாக பிரதிநிதி -குறித்த கடிதம் | 20.10.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.57 | மனுதாரர் உள்ளக விசாரணை அதிகாரி | 21.10.2022 | ஒளிப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அவர்களுக்கு அனுப்பிய கடிதம் | | நகல் |
| நி.சா.ஆ.58 | எதிர்மனுதாரர் உள்ளக விசாரணை அதிகாரி அவர்களுக்கு வழங்கிய கடிதம் | 07.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.59 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ஆவணங்கள் கோரி அனுப்பிய கடிதம் | 13.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.60 | எதிர்மனுதாரர் உள்ளக விசாரணை அதிகாரி அவர்களுக்கு வழங்கிய கடிதம் | 15.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.61 | உள்ளக விசாரணை அதிகாரி அவர்களின் அழைப்பாணை | 15.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.62 | எதிர்மனுதாரர் உள்ளக விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 16.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.63 | மனுதாரர் எதிர்மனுதாரருகு அனுப்பிய சிறு, மருத்துவ விடுப்பு மற்றும் மருத்துவ சான்றிதழின் நகல்கள் | 21.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.64 | உள்ளக விசாரணை அதிகாரி அவர்களின் அழைப்பாணை மற்றும் பதிவுத் தபால், ஒப்புகை இரசீதுகளின் நகல்கள் | 22.11.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.65 | மனுதாரர் உள்ளக விசாரணை அதிகாரி அவர்களுக்கு வழங்கிய கடிதம் | 04.12.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.66 | உள்ளக விசாரணை நடவடிக்கைகள் | - | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.67 | உள்ளக விசாரணை முடிவுகள் | 24.12.2022 | ஒளிப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | நகல் |
| நி.சா.ஆ.68 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு | 29.12.2022 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.69 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கால அவகாசம் கோரி வழங்கிய கடிதம் | 05.01.2023 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.70 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய கடிதம் | 09.01.2023 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.71 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு வழங்கிய கடிதம் | 17.01.2023 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.72 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு விளக்கக் கடிதம் சமர்ப்பிக்க வழங்கிய கடிதம் | 21.01.2023 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.73 | மனுதாரர் எதிர்மனுதாரருக்கு இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு அனுப்பிய விளக்கக் கடிதம் | 23.01.2023 | ஒளிப்பட நகல் |
| நி.சா.ஆ.74 | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய நிரந்தர பணி நீக்க உத்தரவு | 01.02.2023 | ஒளிப்பட நகல் |

Digitally signed by
ARUNACHALAM KUTTALINGAM
Date: 2024.12.16 12:06:46 +05'30'

தலைமை தாங்கும் அதிகாரி,

கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்